பொங்குதமிழ்
விபரங்கள் உள்ளே →

# களத்தில்

எமது தேசியப் பிரச்சினை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்து வருகின்றது. இப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகிறது. உலக மனச்சாட்சியின் பார்வை எம்பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகிறது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*



25-01-2001 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (226)

# போர் நிறுத்தம் தொடரும்

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

**கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 24ம் திகதி, விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்த ஒரு மாதகால ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம், சனவரி 24ம் திகதி நள்ளிரவுடன் முடிவடைய இருந்த நிலையில், மேலும் ஒரு மாதகாலத்திற்கு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதென விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.**

23.01.2001 அன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில், தம்மால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடித்திருப்பதாக அறிவித்திருக்கின்றது. அத்தோடு, தமது போர்நிறுத்த அறிவிப்பை ஏற்று, சமாதானத்தைப் பேணி, இயல்புநிலையை உருவாக்கி, பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறும் விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்தை இவ்வறிக்கை வாயிலாக வேண்டிக்கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் ஒருமாதகால போர்நிறுத்த அறிவித்தலை, ஒரு ஏமாற்று வித்தையாக வர்ணித்து நிராகரித்ததுடன், அக்காலகட்டத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகளிலும் சந்திரிகா அரசு ஈடுபட்டது. எனினும் விடுதலைப் புலிகள் இயக்கம், தாம் அறிவித்தபடி, போர்நிறுத்தத்தை ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கடைப்பிடித்ததுடன், தற்காப்புப் போரில் மட்டுமே ஈடுபட்டனர். சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளின் சமாதான சமிக்ஞையை அர்த்தமற்றதெனவும் ஏமாற்றுவித்தை எனவும் கூறி நிராகரித்து, போர்முன்னெடுப்புக்களை முடுக்கிவிட்டுள்ளபோதும், சமாதான முயற்சியில் தாம் கொண்டுள்ள இறுக்கமான பிடிப்பை வலியுறுத்தும் வண்ணம் விடுதலைப் புலிகள் தமது போர்நிறுத்த காலத்தை மேலும் நீடிப்புச் செய்திருக்கின்றனர்.

'தற்போது நிலவும் இராணுவ நெருக்கடி பெரும் போராக விரிவடைவதைத் தவிர்க்கும் நோக்கத்துடனும், நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் நோக்குடனும் நாம் எமது ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்க முடிவெடுத்துள்ளோம். நாம் எமது போர்நிறுத்தத்தை நீடிக்க முடிவெடுத்திருப்பது சமாதானத்தில் எமக்குள்ள நேர்மையான அக்கறையையும், சமாதான வழியில் இன நெருக்கடிக்கு தீர்வுகாணவேண்டுமென்ற எமது உண்மையான அபிலாசையையுமே எடுத்துக்காட்டுகிறது. தமிழர் தேசம் ஒருமித்த குரலாக சமாதானம் வேண்டி விடுக்கும் அறைகூவலுக்கும், சமாதான வழியில் சென்று பிரச்சினையைத் தீர்க்குமாறு சர்வதேச சமூகம் விடுத்துவரும் அழைப்பிற்கும் செவிமடுத்தே நாம் இந்த முடிவை எடுத்தோம்' இவ்வாறு, விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


'எமது போர்நிறுத்த அறிவிப்பை ஏமாற்றுவித்தை என, சிறீலங்கா அரசு நிராகரித்தமை எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையம் தருகின்றது. எமது நேர்மையான நல்லெண்ண சமிக்ஞையை சிங்கள அரசு இழிவுபடுத்தியதும் அல்லாமல், போர்நிறுத்த காலகட்டத்தில் எமக்கு ஆத்திரமூட்டும் வகையில் பாரிய இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இவ்விதமான கடும்போக்கான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதால், போரினால் ஏற்படும் உயிரழிவுகள் பற்றி இந்த அரசுக்கு எந்தவிதமான அக்கறையுமில்லை என்பதையும், வன்முறைப் பாதையில்தான் அதற்கு நாட்டமிருக்கின்றது என்பதையுமே உலகிற்கு எடுத்துக்காட்டியிருக்கின்றது' என, அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

'எமது போர்நிறுத்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, போர் நெருக்கடியைத் தணிப்பதற்கும், இயல்புநிலையை ஏற்படுத்துவதற்குமாக நோர்வே அரசு தெரிவித்த யோசனைகளை செயற்படுத்த சிறீலங்கா அரசு முன்வருமானால், எமது விடுதலை இயக்கம் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ளத் தயாராக இருக்கின்றது. சிங்கள அரசு தனது போர்வெறிகொண்ட கடும்போக்கைக் கைவிட்டு, சமாதானப் பாதையைக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச உலகம், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா ஆகியன தமது இராஜதந்திர செல்வாக்கைப் பிரயோகித்து அழுத்தம் போடவேண்டும்' என்றும், விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.


'சிறீலங்கா அரசு போர்நிறுத்தம் செய்வதற்குத் தயங்குவதற்கும், சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்குவதற்கு மறுப்பதற்கும் காரணமுண்டு. பிரித்தானிய அரசாங்கம் தனது புதிய பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகளை தடைசெய்யவேண்டுமெனக் கோரிவரும் சிங்கள அரசு, சமாதானச் சூழ்நிலை ஏற்படாதவண்ணம் பகைமையையும் போர் சூழ்நிலையையும் தொடரச் செய்யவே விரும்புகின்றது. புலிகளுக்கு உண்மையில் சமாதானத்தில் அக்கறையில்லையெனக் காட்டவும் விரும்பகின்றது' என, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீட்டுவதென்ற விடுதலைப் புலிகளின் இந்த அறிவிப்பு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்திற்கூடாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இக்கால நீடிப்பையும், ஏமாற்று வித்தையெனவும், பொறியெனவும் வர்ணித்து நிராகரித்து, போரைத் தீவிரப்படுத்தி சமாதானப் பாதையில், சந்திரிகா அரசு பாரிய தடையை ஏற்படுத்தப்போகின்றதா? அல்லது தமிழ்மக்களினதும் உலகத்தினதும் ஒட்டுமொத்த எதிர்ப்பிற்கு அடிபணிந்து, போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மேசைக்கு வரச் சம்மதிக்கப்போகின்றதா என்பது எதிர்வரும் நாட்களில் தெரிந்துவிடும். ■

*பொங்குதமிழ் நிகழ்ச்சியைத் தடுக்க சந்திரிகா அரசு எத்தனையோ கீழ்த்தரமான வழிவகைகளைக் கையாண்டு பார்த்தும் தோற்றுப்போயுள்ளது. தெற்கில், சிங்களப் பேரினவாதிகள் சமாதானத்திற்கெதிராக போராட்டம் நடத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் சந்திரிகா அரசோ, சமாதானத்திற்கு ஆதரவாக தமிழ்மக்கள் போராட்டம் நடத்த விடாமல் தடுக்கின்றது. சந்திரிகா அரசு, தமிழ் இனத்துக்கு எதிரானது மட்டுமல்ல சமாதானத்துக்கும் எதிரானது என்பது இதற்குக் காரணம்.*




**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# போரைப் பொறியாகப் பாவிக்கும் சந்திரிகா அரசு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கடந்த ஆண்டு டிசம்பர் 24ம் திகதியில் இருந்து இவ்வாண்டு சனவரி 24ம் திகதிவரைப்பட்ட ஒரு மாத காலத்திற்கு ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்தது. தமது போர்நிறுத்தத்தை ஏற்று, பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்த சிறீலங்கா அரசு முன்வரும் என, விடுதலைப் புலிகள் தமது நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவித்தலை சிறீலங்கா அரசு நிராகரித்ததோடல்லாமல், யுத்த நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தியது. கினிகீர தொடர் இராணுவ நடவடிக்கைகளைத் தொடுத்து, தென்மராட்சிப் பகுதியிலும், யாழ்நகரின் தென்கிழக்குப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்பை மேற்கொண்டது.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை ஏமாற்றுவித்தை எனவும், விடுதலைப் புலிகளின் பொறி எனவும் வர்ணித்து நிராகரித்ததோடல்லாமல், போர் நடவடிக்கையை தீவிரப்படுத்தியது சிறீலங்கா அரசு. எனினும், சிங்களப்படையினருக்கெதிரான வலிந்த தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளாமல், தற்காப்பு யுத்தத்தில் மாத்திரம் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வந்தனர்.

நோர்வேயின் சமாதான முன்னெடுப்பை வரவேற்று, போர் நெருக்கடிகளைத் தணித்து, நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கோடு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை சிறீலங்கா அரசு, தனது படை நடத்துகைக்கான நல்ல வாய்ப்பாகக் கருதியது.

போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்தபடி, சிங்களப் படையின் பாரிய போர்நடவடிக்கைகளை எதிர்கொள்வதில் உள்ள கடினம் யாவராலும் உணரப்படக் கூடியதே. போர்நடவடிக்கைக்காக சிங்களப்படையினர் தயாரிப்பில் இறங்கியுள்ளனர் என அறிந்தபோதும், வலிந்த தாக்குதல்களை நடத்தி, போர்த்திட்டங்களை தவிடுபொடியாக்கும் வல்லமை விடுதலைப் புலிகளிடம் இருந்தபோதும், தாம் அறிவித்தபடி போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருந்தனர். போர்நிறுத்தம் காரணமாக தற்காப்பு யுத்தத்தை மாத்திரம் கையாண்ட விடுதலைப் புலிகள், சிங்களப்படையின் பாரிய படைமுன்னெடுப்புக்களை எதிர்கொள்வதில் உள்ள கடினத்தை உணர்ந்தனர். அதேவேளை, குடாநாட்டில் நிலைகொண்டுள்ள அணிகளுக்கான கிளாலி கடல்நீரேரிக்கூடான விநியோகச் சிக்கலும் முக்கிய பிரச்சினையாக இருந்தது. இவை காரணமாகவும், தேவையற்ற இழப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கிலும் விடுதலைப் புலிகள் சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி பகுதிகளில் இருந்து தந்திரோபாயரீதியாக வெளியேறிக்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை, தமக்குச் சாதகமாக்கி, போர்நடவடிக்கையை தீவிரப்படுத்திய சிறீலங்கா அரசு, சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி, அரியாலைப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிக்கொண்டதை உணராமல், பெரும் போர் நடத்தி, இழப்புக்கள் எதுவும் இன்றி அப்பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டதாக வெற்றி கொண்டாடியது.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தல் சர்வதேச சமுகத்தின் வரவேற்பைப் பெற்றதுடன், தமிழர் தரப்பில் ஒருமித்த குரலாக அது வெளிப்பட்டது. தமிழர் தேசம், போர்நிறுத்தத்தை வலியுறுத்தியதுடன், பேச்சுவார்த்தையை தொடங்குமாறு குரல் எழுப்பியது. தமிழ் மக்கள் ஒருமித்த குரலாக தமது அபிலாசைகளை முன்வைத்தனர். தமிழர் ஒரு தேசிய இனம், தமிழ்மக்களிற்கு மரபுவழித் தாயகம் உண்டு, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என, தமிழீழ தேசிய இனத்தின் அரசியல் அந்தஸ்தை நிலைநாட்டும் இந்த அடிப்படைக் கோட்பாடுகளை, தமிழர் தேசம் ஒருமித்த குரலாய் முன்வைத்தது.

தமிழர் தேசத்தின் இந்த சனநாயகக் குரலுக்கு, சந்திரிகா அரசு செவிசாய்க்க மறுத்தது. சர்வதேசத்தின் அழுத்தங்களை அலட்சியப்படுத்தி, போர் மீதான தனது வெறியை அது வெளிக்காட்டியது. சனவரி 10ம் திகதி, கொழும்பு சென்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம், சிறீலங்கா அரசை போர்நிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ள வைக்க பெரிதும் முயற்சி எடுத்தார். போர்நிறுத்தத்தை நிராகரித்த சிறீலங்கா அரசு, சனவரி 16ம் திகதி, ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நோக்குடன், கிளாலி எழுதுமட்டுவாள் பகுதிகளில் பெரும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. எனினும், விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் சிங்களப்படையினருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியதுடன், அவ் இராணுவநடவடிக்கையை நிறுத்தி வைக்கவேண்டிய கட்டாயத்திற்கு படையினரை உள்ளாக்கியது.

சனவரி 24ம் திகதி விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் முடிவடையவிருந்த நேரத்தில், சமாதான முயற்சிக்கு ஏற்படப்போகும் நெருக்கடி நிலைகுறித்து, நோர்வே அரசு கவலைகொண்டது. விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும், போரைத் தீவிரப்படுத்தி விஸ்தரிக்கும் நடவடிக்கைகளில் இறங்காமல், பார்த்துக்கொள்வதற்காக நோர்வே அரசு பெரும் முயற்சியில் ஈடுபட்டது.

கொழும்பிலுள்ள நோர்வேயின் தூதுவர் திரு. வெஸ்ட்பேர்க், சனவரி 19ம் திகதி, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைச் சந்தித்து, நோர்வேயின் சமாதானத் திட்டத்தை அமுல்செய்வது குறித்துப் பேசியதுடன், போர் மீண்டும் தீவிரமடைந்தால், சமாதான முயற்சிகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் குறித்து எடுத்து விளக்கினார். இருந்தபோதும், சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தை ஏற்று, போர் நெருக்கடியைத் தணித்து, பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான இயல்புநிலையைத் தோற்றுவிக்க மறுத்தது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் திரு. எரிக் சுல்கைம் அவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கத்தை, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தம் காலாவதியாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னராக சந்தித்து, போர் தீவிரமடையாமல் தவிர்ப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். போர்நிறுத்தம் முடிவடைந்து, மீண்டும் மோதல்கள் தீவிரமடைந்தால், நோர்வேயின் சமாதான முயற்சிகள் நெருக்கடிக்கு உள்ளாகும் என்பது குறித்தும் பேசப்பட்டது.

இந்நிலையில், நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகள், தமது போர்நிறுத்த அறிவித்தலை மீண்டும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்புச் செய்வதென முடிவெடுத்து அறிவித்தனர். சிறீலங்கா அரசை போர்நிறுத்தம் செய்ய வைத்து, பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர, சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என, விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சமாதான சூழ்நிலை ஏற்படாவண்ணம் பகைமையையும், போர்ச் சூழ்நிலையையும் தொடரச் செய்வது அரசாங்கத்தின் திட்டமாக இருக்கின்றது. போர்ச்சூழ்நிலையும், பகைமையும், வன்முறையும் தொடர்ந்தால், விடுதலைப் புலிகளுக்கு சமாதானத்தின் மீது அக்கறையில்லை என, சந்திரிகா அரசால் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும். அத்துடன், பிரித்தானியா போன்ற நாடுகளிடம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேருங்கள் என வலியுறுத்தவும் வசதியாக இருக்கும். போர் நிறுத்தத்தை, விடுதலைப் புலிகளின் பொறியென வர்ணித்தபடி சிங்கள அரசோ, போரைத் தனது பொறியாகப் பாவிக்க முற்படுகின்றது. ■

# தொடரும் பொருளாதாரத் தடையினால் ஏற்படும் போசாக்குக் குறைவும் அவல மரணங்களும்

கடந்த மாதம் நான்கு பொது மக்கள் போசாக்குக் குறைவு காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையில் இறந்துள்ளனர். அது மாத்திரமின்றி கிளிநொச்சி வைத்தியசாலையானது விசுர்நாய்க்கடிக்கு இலக்காகி வரும் பொதுமக்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலையிலும் உள்ளது. ஏனெனில் நீண்ட நாட்களாக விசர்நாய்க்கடி தடுப்பூசிகள் வைத்தியசாலையின் மருந்துக்களஞ்சியத்தின் இருப்பில் இல்லை. ஒரு தசாப்தத்திற்கு மேலாக சிறீலங்கா அரசினால் விதிக்கப்பட்டுவரும் பொருண்மியத் தடை காரணமாக குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிப்புறுகின்றனர். வன்னிப் பெருநிலப்பில் வாழும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசிய பொருட்களான தடுப்பூசிகள் மற்றும் மருந்துக் குளிகைகள் பொதுவாகக் கிடைப்பதில்லை. சில காலங்களில் மிகக் குறைந்த அளவிலேயே இவை சிறீலங்கா பாதுகாப் புத்தரப்பினரால் வன்னிப்பகுதிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த மார்கழி மாதத்தில் மாத்திரம் 8 பெரியவர்களும், 12 வயதிற்கு உட்பட்ட 25 சிறுவர்களும் போசாக்கின்மை காரணமாக கடும்நோய்வாய்ப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடும் நோய்வாய்ப்பட்டோரை மேலதிக சிகிச்சைக்கு வவுனியாவிற்கு அனுப்புவதும் மிகக்கடினமானதாக உள்ளது. சிறீலங்காப் படைத்தரப்பின் கெடுபிடிமிக்க கட்டுப்பாடுகளால் மிக நெடும்பயணமாகவே இது உள்ளது. அதுவும் குழந்தைகளை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா செல்வதென்பது மிகக்கடினமானதாகவே உள்ளது. பெற்றோர்களுக்கான போக்—குவரத்து அனுமதியைப் பெறுவதில் பெரும் கடினம் நிலவுகின்றது.

சிரேஸ்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் தகவலின்படி வன்னிப்பெருநிலபரப்பில் என்றுமில்லாத அளவிற்கு சிசுமரணமும், எடைகுறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதமும் அதிகரித்துள்ளதாக வன்னி வைத்தியசாலைகளில் பெறப்படும் தரவுகளில் தெரிய வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகப்பேற்றிற்காக வருகின்ற பெருந்தொகையான தாய்மாரும் போசாக்கின்மையால் பெரிதும் துன்புறுகின்றனர்.

கடந்த வருடத்தில் மல்லாவி வைத்தியசாலையில் 291 குழந்தைகளும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 256 குழந்தைகளும் நிறைகுறைவாகப் பிறந்துள்ளன. 14 குழந்தைகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் இறந்துள்ளன. 160 நோயாளர்கள் கடந்த வருடம் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்துள்ளனர், அதுவும் அனுமதிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களில் 150 நோயாளிகள் இறந்துள்ளனர்.

வன்னியின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மருந்தகங்களும் சுகாதாரவைத்திய நிலையங்களும் மூடப்படவேண்டிய நிலையிலுள்ளன. மருந்து மற்றும் வளங்களுக்கான பற்றாக்குறைகள் தொடர்ந்து காணப்படுவதால் இவை இயங்க முடியாத நிலையிலுள்ளன. இதுவே இன்றைய வன்னிப் பெருநிலப்பரப்பில் வன்னியில் வாழும் தமிழர்களுக்கான மருத்துவ வசதிகளின் நிலை. ■

# அம்மையாரின் ஆட்சியில் பத்திரிகையாளர்

இந்த மாதத்தின் முற்பகுதியில் சிறீலங்காவின் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டவரான யாழ் பத்திரிகையாளர் திரு. நடராஜா திருச்செல்வம் தாம் தாக்கப்பட்ட விதம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலக அதிகாரி எஸ். சிறீதரனிடம் முறையிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டைப் பகுதியிலுள்ள பயங்கரவாதத்தடுப்புப் பிரிவின் தலைமை முகாமான ஆறாம் மாடியில் தற்போது இவர் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார். கடந்த 18ஆம் திகதி இவரைச் சந்தித்த ஆணைக்குழு அதிகாரியிடம் அவர் கூறியதாவது 'சுமார் 12 தினங்கள் தனியான அறை ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்தேன். அங்கு எனது கைகளுக்கு விலங்கிட்டனர். அதன்பின்னர் கதிரை ஒன்றில் இருத்தி கதிரையின் கைப்பிடியுடன் பூட்டிவிட்டனர். அதன்போது நான் தொடர்ச்சியாக எஸ்லோன் பைப்பினால் தாக்கப்பட்டேன். பின்னர் நீண்ட நாட்களுக்குப்பின்னர் ஒரேயொரு தடவை மாத்திரம் எனது மனைவி என்னைப்பார்க்க அனுமதிக்கப்பட்டார். அதன் பின்னர் 14ஆம் திகதி ஏனைய கைதிகள் இருக்கும் அறைக்கு என்னை இடம்மாற்றினர்"

47 வயதாகும் பத்திரிகையாளர் திருச்செல்வம் தமது குடும்பத்தினர் சகிதம் கொழும்பிற்குச் சென்றிருந்த வேளையிலேயே வெள்ளவத்தையில் வைத்து பயங்கரவாதத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். 20 நாட்களுக்கு மேலாகியும் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து எதுவும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தெரிவிக்கப்படவுமில்லை. குற்றச்சாட்டுகள் ஏதாவது குறிப்பிடப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவுமில்லை. ■

# "சிறீலங்கா அரசு தனது ஆயுதப் படைகளை முழு அளவிலான போருக்கு தயார்ப்படுத்துகின்றது"

## 12.01.2001 அன்று "தமிழ் கார்டியன்"க்கு வழங்கிய செவ்வியில் திரு. அன்ரன் பாலசிங்கம்



கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

*தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம். லண்டனிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'தமிழ் கார்டியன்' இதழுக்கு 12.01.2001 அன்று வழங்கிய விசேட செவ்வியில் விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு எதிராகப் பாரிய அளவில் தாக்குதல்களை நடத்தும் நோக்கத்துடன், சிங்கள அரசு புதிய படையணிகளையும் பீரங்கிகள், டாங்கிகள், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் யாழ்ப்பாணக் களத்திற்கு அனுப்பியிருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.*

*செவ்வியின் போது திரு. பாலசிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு*

### இன்று சிறீலங்காவில் நிலவும் அரசியல் இராணுவ நிலைமை

இலங்கையின் இனநெருக்கடிச் சிக்கலில் பிரதான பாத்திரத்தை வகிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறீலங்கா அரசுக்கும் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையீனமும், சந்தேகமும் காரணமாக பிளவு விரிந்துசெல்கின்றது. எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகால போர்நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து, மிகவும் ஒழுங்காக சமாதானத்தைப் பேணி வருகின்றது. எமது இந்த நல்லெண்ண சமிக்ஞையை கருத்தில் எடுக்காது, பொருட்படுத்தாது சிங்கள ஆயுதப்படைகள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. ஒருதலைப்பட்சமாக நாம் கடைப்பிடித்துவரும் போர்நிறுத்தத்தால் எழுந்த சமாதானச் சூழலை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வன்னிப் பிரதேசத்திலும் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தும் நோக்கத்துடன் சிறீலங்கா அரசு தனது ஆயுதப் படைகளை முழு அளவிலான போருக்குத் தயார்படுத்திவருகின்றது. யாழ்ப்பாணப் போர்க்களத்திற்குப் புதிய படையணிகளையும் பீரங்கிகள், டாங்கிகள், பல்குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற கனரக அழிவு ஆயுதங்களையும் சிங்கள அரசு அனுப்பிவருகின்றது. கிளாலி- எழுதுமட்டுவாள்- நாகர்கோவில் எல்லையோரமாக நிலைகொண்டுள்ள எமது பாதுகாப்பு அரண்களை ஊடறுத்து ஆனையிறவு நோக்கி நகரும் நோக்குடன், ஒரு பாரிய தாக்குதற்திட்டம் வரையப்பட்டிருக்கின்றது. இப்பாரிய தாக்குதலை நடத்த சிறீலங்கா முற்படுமாயின் அதன் விளைவு பாரதூரமாக அமையும். இது எதிரிக்கு பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தும் என்பது மட்டுமல்லாமல் போர் என்றுமில்லாத அளவுக்கு விரிவடையும் சாத்தியமும் உண்டு.

சந்திரிகாவின் ஆட்சிபீடத்திற்கு சமாதானத்தில் அக்கறையில்லை. பேச்சுவார்த்தை மூலமாகப் பிரச்சினையைத் தீப்பதிலும் அக்கறையில்லை. இவர்களுக்கு இராணுவத் தீர்வில் தான் அக்கறையும், நம்பிக்கையுமுண்டு. போராடுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் பாரிய உயிரழிவுகள் பற்றி இந்த ஆட்சிபீடம் கவலைப்படுவதில்லை. அரசாங்கத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்யும்பொழுது சமகால அரசியல்-இராணுவ சூழ்நிலை தெளிவற்றதாக, இருள் படிந்ததாகவே தென்படுகின்றது.

### நாம் ஒரு பலமான தளத்திலிருந்தே போராடுகின்றோம்

விடுதலைப் புலிகள் பலமிழந்துவிட்டார்கள் என்ற மதிப்பாய்வு மிகவும் தவறானது. எமது நேர்மையான நோக்கத்தை அரசதரப்பு தவறாகப் புரிந்திருக்கின்றது.

நாம் ஒரு பலமான தளத்திலிருந்தே சமாதானத்தை நாடுகின்றோம். இராணுவரீதியாக மட்டுமன்றி தார்மீகரீதியாகவும் நாம் பலமாக இருக்கின்றோம். எமது மக்களின் போராட்ட இலட்சியம் நியாயமானதாக, நீதியானதாக அமையப்பெற்றிருப்பதால் அது எமக்குத் தார்மீக பலத்தைத் தருகின்றது.

தமிழர்களது இனப்பிரச்சினையானது அடிப்படையில் ஒரு அரசியற் பிரச்சினையே. ஆகவே, இப்பிரச்சினையை அரசியல் மார்க்கமாக, அரசியற் பேச்சுவார்த்தை மார்க்கமாக தீர்த்துவிடலாம் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. அதனால்தான், நாம் சமாதானத்தை நாடிநிற்கின்றோம்.

சமாதான வழிமூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்குமாறு சர்வதேச சமூகம் எம்மையும், சிறீலங்கா அரசையும் வற்புறுத்திவருகின்றது. இந்தவேண்டுகோளை சாதகமாக வரவேற்று நாம் சமாதான வழிமுறையை கடைப்பிடிக்கின்றோம். வெறும் வார்த்தைகளில் அல்லாமல் செயல்முறை வடிவத்தில் எமது சமாதான நோக்கை நாம் நிரூபித்துக்காட்டியிருக்கின்றோம். ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தப் பிரகடனம் செய்து, இராணுவத்தின் ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் மத்தியிலும் நாம் சமாதானத்தைப் பேணிவருகின்றோம். நேர்மையான முறையில் சமாதான வழிமுறையை நாடும் எமது முயற்சியை சர்வதேச சமூகம் வரவேற்கும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு.

### யாழ்ப்பாணத்தில் சமீபகாலத்தில் தந்திரோபாய பின்நகர்வுகளையே மேற்கொண்டோம்

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி, அரியாலைப் பகுதிகளில் நாம் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக தந்திரோபாய பின்நகர்வை மேற்கொண்டோம்.

ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்து சமாதானத்தைப் பேணியவாறு பெரிய அளவில் எதிர்த்தாக்குதல்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. அடுத்தபடியாக இப்பகுதிகள் ஒரு பாதுகாப்பு யுத்தத்திற்கு அனுகூலமான நிலப்பரப்பும் அல்ல. திறந்த வெளிப்பகுதிகளைக்கொண்ட இப்பிரதேசத்தில் வான் தாக்குதல்களுக்கு எமது போராளிகள் அநியாயமாகப் பலியாகலாம். அத்தோடு, பூநகரியிலிருந்து கடல் நீரேரியைக் கடந்து போராளிகளையும், ஆயுதங்களையும் கொண்டுசெல்வதில் பல சிக்கல்களும் உள்ளன. இத்தகைய காரணங்களுக்காகவும், குறிப்பாக எமது போராளிகள் மத்தியில் உயிர்ச்சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கத்துடனுமே நாம் இப்பகுதிகளிலிருந்து தந்திரோபாயப் பின்நகர்வை மேற்கொள்வதென முடிவெடுத்தோம். இதனை யாராவது பலவீனம் எனக் கருதினால் அது பெரிய தவறான பார்வையாகும்.

### ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பை சந்திரிகா அரசு நிராகரித்து விட்டது. சந்திரிகா அம்மையாரின் உரை குறித்து...

பொய்களும் புரட்டுகளும் வெறுமையான அர்த்தமற்ற வார்த்தைக்குவியல்களும் அடங்கிய பெரியதொரு பொதியாக சந்திரிகாவின் உரையை நாம் வர்ணிக்கமுடியும். இதில் எமது மக்களுக்குப் பயனுள்ளதாக எதுவுமே இல்லை. இந்த உரையில் சந்திரிகா தனது அரசாங்கத்தை நன்னெறிப் பண்பின் திருவடிவமாகவும், நீதியையும் சமத்துவத்தையும் கடைப்பிடித்து, சிறுபான்மைச் சமூகத்தவர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்துவரும் ஒரு சிறந்த ஆட்சிபீடமாகவும் வர்ணிக்கின்றார். அத்தோடு, வடக்கில் கோடி கோடியாகக் கொட்டிக்குவித்து தமிழ் மக்களின் நலனுக்காக தனது அரசாங்கம் பெரும்பணி ஆற்றுவதாகவும் புகழ்ந்துரைக்கின்றார். இதையெல்லாம் கேட்கும்பொழுது எமது மக்களுக்கு வியப்பாகவும், வேடிக்கையாகவும் இருந்திருக்கும். சாராம்சத்தில், சந்திரிகாவின் உரையானது தமிழ் மக்களின் அறிவுக்கு இழைக்கப்பட்ட ஒரு அவமதிப்பாகக் கருதவேண்டும்.

உண்மையில், இந்த உரை தமிழ் மக்களுக்கு, யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு விடுக்கப்படவில்லை. யாழ்ப்பாண மக்கள் புத்திசாலிகள், தந்திரமும் சாணிக்கியத் திறமையும் படைத்தவர்கள். சந்திரிகாவின் உரையில் பொதிந்து கிடக்கும் அரசியல் நயவஞ்சகத் தன்மையை அவர்கள் இனம் கண்டுகொள்வார்கள். இந்த உரையானது, சர்வதேச சமூகத்திற்கு குறிப்பாக உதவி வழங்கும் நாடுகளுக்கு விடுக்கப்பட்டிருக்கின்றது. சீல நெறிகளைக்கொண்ட சிறப்பான ஆட்சி என்றும், சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் நல்லரசு என்றும், போரால் சிதைந்து போன வடக்கை புனரமைப்பதே அரசின் இலட்சியம் என்றும் சந்திரிகா சுயபுகழ் பாடுவது உதவிவழங்கும் உலக நாடுகளுக்குத்தான். ஆனால், சந்திரிகாவின் ஆட்சிபீடத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும், சீர்கேடுகள் பற்றியும் வடக்கில் நிலவும் யதார்த்த நிலைமைகள் பற்றியும் உலக அரசுகள் நன்கறியும். போர் தொடருமானால் வடக்கை பொருளாதாரரீதியில் கட்டி எழுப்புவது சாத்தியமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். இதன்காரணமாகவே, போர்நிறுத்தம் செய்து இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு உலக சமூகம் வலியுறுத்திவருகின்றது. உலகத்தின் கோரிக்கைக்கு இணங்க நாம் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்து, எமது நல்லெண்ண நோக்கை செயல் வடிவத்தில் காட்டியிருக்கின்றோம். ஆனால், சிறீலங்கா அரசு போரை நிறுத்த மறுத்துவருகின்றது. போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு சமாதானப் பேச்சையும் நடத்தலாமெனக் கூறுகின்றது. பேசிக்கொண்டு போரை நடத்தும் அபத்த நாடகத்தில் நடிக்க நாம் தயாராக இல்லை.

நாம் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம். எமது போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு, தானும் போர்நிறுத்தம் செய்து, வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமானால் நாம் போர்நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கும், பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கும் நாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தோம். எமது நல்லெண்ண சமாதான முயற்சியை நிராகரித்துள்ள சந்திரிகா போரை நிறுத்துவதற்கும், பேச்சுக்களில் பங்குகொள்வதற்கும் விடுதலைப் புலிகளுக்கு அக்கறையில்லை எனக் கூறுகின்றார். எமது விடுதலை இயக்கம் பற்றி சந்திரிகாவின் மனதில் விகாரமாகப் புரையோடிக்கிடக்கும் ஆழமான வெறுப்பையும், சந்தேகத்தையுமே இக்கூற்று வெளிப்படுத்துகின்றது. இந்த வெறுப்பும் சந்தேகமும் காரணமாகவே விடுதலைப் புலிகளுக்கும், சந்திரிகா அரசுக்கும் மத்தியில் பிளவு விரிந்து செல்கின்றது. இரு தரப்பினர் மத்தியில் நிலவும் வரலாற்றுப் பகைமைபற்றியும், சந்தேகங்கள் பற்றியும் நோர்வே அரசுக்கு நன்கு தெரியும். இதன் காரணமாகவே பரஸ்பரம், நம்பிக்கையை வளர்க்கும் நோக்கத்துடன் இரு தரப்பினரும் பரஸ்பர நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ளும் யோசனையை நோர்வே அறிவித்தது. ஆனால், இந்த யோசனைபற்றி சந்திரிகா அரசு இன்னும் முடிவெதுவும் தெரிவிக்கவில்லை.

### தமிழரின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை உள்வாங்கிக்கொள்ளும் போதிய சட்ட வாய்ப்புகள் அரசியல் யாப்புக் கட்டமைப்பில் இல்லை.

செயலிழந்து செத்துப்போன சந்திரிகாவின் அரசியல் யாப்புத் திருத்த யோசனைகள் சம்பந்தமாக நாம் ஏற்கனவே எமது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக விளக்கியிருக்கின்றோம். இந்த அரசியல் யாப்பில் ஆழமான குறைபாடுகள் இருக்கின்றன. தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தில் அவர்களுக்குரிய நிலையான, மாற்றமுடியாத உரிமை, தேசிய இனம் என்ற ரீதியில் அவர்களுக்குரிய அரசியல் தகைமை, அவர்களது சுயநிர்ணய உரிமை ஆகியவைகளையே தமிழர் பிரச்சினையின் அடிப்படைகளாகும். அதுவே அவர்களது அரசியல் அபிலாசைகளுமாகும். எமது மக்களுக்கெதிரான போரையும், வன்முறையையும் நிறுத்தி, சமாதானத்திற்கு ஒத்திசைவான இயல்பு நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால் நாம் இந்த அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

### முதலில் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் நோர்வேயின் விசேட தூதர் திரு. எரிக் சோல்ஹெய்மிற்கு அறிவிக்கப்பட்டது.

எமது விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகாலத்திற்குப் போர்நிறுத்தம் செய்ய முடிவுசெய்திருப்பதாக முதலில் நோர்வேயின் விசேட தூதர் திரு. எரிக் சொல்ஹெய்மிற்கு நான் அறிவித்தேன். எமது அதிகாரபூர்வமான அறிக்கையையும் தொலைநகல் மூலம் அவருக்கு அனுப்பிவைத்து, சிறீலங்கா அரசிற்கு அறிவிக்கும்படி சொல்லிய பின்னரே விடயத்தை சர்வதேசமூடாக உலகத்திற்கு அறிவித்தேன். அந்த நேரத்தில் சிறீலங்கா ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும், முக்கிய அமைச்சர்களும் கொழும்பில் இருக்கவில்லை. அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளில் விடுமுறையைக் கழித்துக்கொண்டார்கள். அதனால்தான் அவ்வேளை அவர்களைத் தொடர்புகொள்ளமுடியவில்லை என திரு. எரிக் சொல்ஹெய்ம் எனக்குத் தெரிவித்தார். எனவே, நாம் அரசுக்கு அறிவிக்கவில்லையென எவரும் குறைசொல்லமுடியாது.

### சமாதான வழியிலான அரசியல் தீர்வு குறித்தும் தமிழரிடையே கருத்தொற்றுமை உருவாகிவருவதன் அறிகுறியே இது

இது மிகவும் வரவேற்கத்தக்க நல்லதொரு திருப்பம் என்றே சொல்லவேண்டும். சமாதானம் குறித்தும், சமாதான வழியிலான அரசியல் தீர்வு குறித்தும் தமிழரிடையே கருத்தொற்றுமை உருவாகிவருவதன் அறிகுறியாகவும் இதனைப் பார்க்கலாம். எமது மக்களின் விடிவிற்காக நாம் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு ஒன்றுபட்ட தமிழரின் குரல் ஓங்கி ஒலிப்பதைக் காண எமக்கு பெருமகிழ்ச்சியாக இருக்கின்றது.

சுயநிர்ணய உரிமைதான் தமிழ் மக்களின் ஆழமான அபிலாசை என்பதை உணர்த்தும் வகையில் யாழ்ப்பாண மக்கள் எழுச்சிக் கோலம் கொண்டு குரலெழுப்ப ஆரம்பித்திருப்பதும் ஒரு வியக்கத்தக்க ஒரு புதிய திருப்பம் என்றே சொல்லவேண்டும். இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ள இப்பிரதேசத்தில் அரசியல் அழுத்தங்கள் எதுவுமின்றி துணிச்சலான ஒரு வெகுசன எழுச்சி பரிணமித்துவருகின்றது வரவேற்கத்தக்கது. தமிழரின் அரசியல் வரலாற்றில் இதுவொரு ஆக்கபூர்வமான திருப்பமாகும். ■

# உலகிடம் மண்டியிட்ட சந்திரிகா யுத்த நிறுத்தத்தை நிராகரிப்பது ஏன்?

விடுதலைப் புலிகள் அறிவிப்புச் செய்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் சிறிலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா குமாரதுங்கவில் இருந்து பிரதமர், வெளியுறவு அமைச்சர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத்தளபதி எனச் சிறிலங்கா அரசில் உயர் பதவிகள் வகிப்பவர்கள் பலரும் கூட்டாகவும் தனித்துவமாகவும் இந் நிராகரிப்பை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், இந்நிராகரிப்பிற்கு இவர்கள் அனைவரும் ஒரே காரணத்தைத் தெரிவித்துள்ளார்களா? என்றால் இல்லை என்றே கூறுதல் வேண்டும். ஒவ்வொருவரும் தமது தனித்துவமான கொள்கை, குணநலனுக்கும் மற்றும் எதிர்கொள்ளும் சூழ்நிலை என்பனவற்றிற்கு மேற்ப நிராகரிப்பிற்குக் காரணத்தைத் தெரிவித்துள்ளனர்.

நீண்ட வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா, சிறிதுகால மௌனத்தின் பின்னர் நிராகரிப்பை வெளியிட்டுள்ளார். உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் புறச்சூழலுக்கு ஏற்ப பேச்சுவார்த்தையையும், யுத்தநிறுத்தத்தையும் நிராகரிக்காதது போன்று, ஆனால், யுத்தநிறுத்தமோ அன்றிப் பேச்சுவார்த்தைக்கான சூழலோ அன்றி வாய்ப்புக்களோ உருவாக முடியாதவாறு தனது நிராகரிப்பை அவர் வெளியிட்டிருந்தார். 'பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு அது முன்னேற்றகரமானதாக அமையும் பட்சத்தில் யுத்த நிறுத்தம் பற்றிப் பரிசீலிக்கலாம்' என்பதன்மூலம் அவர் யுத்தநிறுத்தத்தை நிராகரித்துள்ளமை மட்டுமல்ல, பேச்சுவார்த்தையின்போதும்கூட யுத்தநிறுத்தம் பற்றிப் பரிசீலிக்கலாம் என உறுதியான முடிவு எதையும் கூற அவர் தயாராக இல்லை.

இதேவேளை, யுத்தத்தை மட்டுமே குறியாகக்கொண்ட பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவோ, புலிகள் பெரும் இராணுவப் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர் எனவும், அவர்களை நம்பி யுத்தநிறுத்தம் செய்யமுடியாது என்றும் அவர்கள் தம்மைப்பலப்படுத்திக் கொள்ளத்தான் அவகாசம் தேடுகின்றனர் எனவும் தனது நிராகரிப்பிற்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் அனுருத்தவின் அபிப்பிராயப்படி- யுத்தத்தை நிறுத்துவதென்பது புலிகள் பலப்படவும், மீண்டும் தாக்குதலுக்குத் தயாராவதற்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் ஆகும். ஆகையினால் புலிகளின் யுத்தநிறுத்தம் நிராகரிக்கப்பட்டு அவர்கள் தோற்கடிக்கப்படும் வரை யுத்தம் தொடரப்படவேண்டும் என்பதாகின்றது.

ஆனால், பிரதமமந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவோ, யுத்தநிறுத்தம் என்ற பேச்சிற்கே இடமில்லை. விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்படும்வரை யுத்தம் தொடரப்படவேண்டும். இதில் சிந்திப்பதற்கு எதுவுமே இல்லை என்று கூறியுள்ளார். இது அவர் முற்றிலுமாக ஊறிப்போயுள்ள பௌத்த-சிங்களப் பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாடாகும்.

இவ்வாறாக அரசியல் தலைமைகளினாலும், அதாவது, யுத்தத்தை வழி நடத்திச்செல்ல முற்படும் இராணுவத்திற்கான அரசியல் தலைமைகளினால்கூட யுத்தநிறுத்தத்தை நிராகரிப்பதற்கு ஒருமித்த காரணி ஒன்றைத் தெரிவிக்கமுடியாத நிலையே உள்ளது. ஆனால், இவர்களினால், ஒன்றை மட்டுமே ஒத்தகுரலில் பேசமுடிகின்றது. அதாவது, தற்போது விடுதலைப் புலிகள் அறிவிப்புச் செய்துள்ள யுத்தநிறுத்தத்தை அரசாங்கம் ஏற்பதற்கில்லை என்பதே அதுவாகும்.

ஆனால், இவர்கள் இதற்காகக்கூறும் காரணிகள் மாறுபட்டவையாகமட்டுமல்ல, ஏற்புடையவையாகவும் இல்லை. எடுத்துக்காட்டாக, ஜனாதிபதி கூறுவது போன்று, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் யுத்தநிறுத்தம் செய்யப்படுவதற்கும், முன்னர் செய்யப்படுவதற்கும் இடையில் வேறுபாடு என்ன இருக்க முடியும்? பேச்சுவார்த்தை ஆரம்பித்தபின் யுத்தநிறுத்தம் செய்யின் யுத்தத்திற்கென தயாரிப்புக்களைச் செய்ய முடியாதா? அன்றி பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்படின் யுத்தநிறுத்தத்தை விலக்கிக்கொள்ளத்தான் முடியாதா? அன்றி, யுத்த நிறுத்தம் செய்யப்பட்ட பின்னர் புலிகள் பேச்சுக்கு வரத் தாமதித்தால் அரசு யுத்தநிறுத்தத்தைக் கைவிட்டு யுத்தத்தைத் தொடரத்தான் முடியாதா?

இதேவேளை, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூறுவதுபோன்று, புலிகளை இராணுவரீதியில் வெற்றி கொள்வது என்பது எத்தனை தூரம் சாத்தியமானது. 18 மாதங்களுக்கு மேலாக ஜயசிக்குறு நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டிருக்கையிலேயே தமது அணிகளை ஒன்றுதிரட்டி ஓயாத அலைகள்-2, 3 நடவடிக்கைகளை வெற்றியாக மேற்கொண்ட விடுதலைப் புலிகளை எத்தகைய இராணுவ நடவடிக்கைகள் மூலம் அணிதிரள்வதைத் தடுக்கமுடியும் இராணுவரீதியில் வெற்றிகொள்ளமுடியும்.

அடுத்ததாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்பார்ப்பது போன்று, ஒரு பேரினவாத ஒடுக்குமுறைப் போராட்டத்தை, அதிலும் விடுதலைப் புலிகள் போன்ற ஆற்றல் பொருந்திய தலைமைத்துவத்தைக் கொண்ட ஓர் அமைப்பை அழித்தொழித்ததாக வரலாறு ஏதும் உண்டா? அவ்வாறு முடியுமாயின் பௌத்த-சிங்களப் பேரினவாதிகள் இதுவரையில் அதனைச் செய்யாது இருந்திருப்பார்களா?

ஆகையினால், ஒட்டுமொத்தமாக ஆட்சியாளர்களின் இந்நிலைப்பாடானது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுவதை இல்லாதொழிக்கும் வகையில், நோர்வேயின் சமரச முயற்சிகளுக்குப் பெரும் இடையூறுகளையும், முட்டுக்கட்டைகளையும் உருவாக்குபவையாக மட்டுமே இருக்கமுடியும். இதனை இம்மாத ஆரம்பத்தில் கொழும்பு வந்திருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசிய உடன் லண்டன் சென்றுள்ளமை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஏனெனில், கொழும்பு வந்த எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவுடனான சந்திப்பின் பின் அது முன்னேற்றகரமாக அமையும் பட்சத்தில், வன்னிக்கு இரண்டாவது தடவையாகவும் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தலாமென அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தவுடன் லண்டன் சென்றுள்ளமையே அவரின் சமரச முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படாததன் விளைவென்றே பொதுவாக அரசியல் வட்டாரத்தில் கருதப்படுகின்றது. எரிக் சொல்ஹெய்மிற்கும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கும் இடையில் நடந்த சந்திப்பும் சுமுகமான முறையில் இருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

ஆனால், சந்திரிகா குமாரதுங்க அரசிடம் இருந்து சமாதான முயற்சிகளுக்கு மாறான/விரோதமானதொரு முடிவு எதிர்பார்க்க முடியாததொன்றல்ல. ஏனெனில், சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் இருந்தபோதே, உள்நாட்டில் யுத்தநிறுத்தமும், சமாதான முயற்சிகளும் ஆளும் தரப்பால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

# நவீன குற்றவாளிகள்




தமிழ் மக்களிற்கெதிராக, ஏவிவிடப் பயன்படுத்தப்பட்ட சிறிலங்காவின் முப்படைகளும், இன்று தன் சொந்த இனத்திற்கே பெரும் தலைவலியாக மாறிவருகின்றன. சிங்களப்படையில் இருந்து தப்பியோடுவோர், தென்பகுதியில் புரிந்துவரும் குற்றச் செயல்கள் மிகமோசமாக அதிகரித்துவருவதால், செய்வதறியாது திகைத்துநிற்கின்றது சிங்கள அரசு. கட்டுப்பாடற்ற வன்முறைக் கூட்டமாக, தமிழர் பகுதியில் வெறியாட்டம் ஆடுவதற்கென்றே திரட்டி அனுப்பப்படும் சிங்களப்படையினர், தற்போது, விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல், உயிர்காக்க ஓடித்தப்புகின்றனர். தமிழர் பகுதியில் வாலாட்டுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதுடன், உயிருக்கு உத்தரவாதமில்லாத இடமாகிவிட்டது என்பதைச் சிங்களப்படையினர் புரிந்துகொள்ள ஆரம்பித்ததன் விளைவுதான், கட்டுக்கடங்காத வெளியேற்றம்.

பணியில் இருந்து தப்பியோடும் படையினரை, சிங்கள அரசு பிடித்து மீண்டும் சண்டையிடப் பணிப்பதால், தப்பியோடும் படையினர் கண்காணாத இடத்திற்குச் சென்று மறைந்து கொள்வதுடன், தமது வாழ்க்கை வசதிகளுக்காக குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். தமது எதிர்காலத் தொழில்களான கொலை, கொள்ளை வழிப்பறி போன்ற இன்னோரன்ன குற்றச் செயல்களை நவீனத்துவத்துடன் மேற்கொள்ள வசதியாக, பணியின்போது தமக்கு வழங்கப்பட்ட நவீன ஆயுதங்களையும் அவர்கள் கொண்டுசென்றுவிடுகின்றனர்.

சிறிலங்காப் படைக்கு ஆட்கள் திரட்டப்படும்போது, யார் எவர் என்ற பாகுபாடின்றி, சமூகக் குற்றவாளிகளும், படையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். கொழுத்த சம்பளம், சலுகைகள் என்பனவற்றைக் காட்டி, சேர்க்கப்படும் இச்சமூகக்குற்றவாளிகள், இனவெறியூட்டப்பட்டு சண்டைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றனர். கடினமான சண்டைக்களத்தில் ஈடுகொடுக்க முடியாத இவர்கள், ஆயுதங்களுடன் தலைமறைவாகிவிடுகின்றனர். சுமார் முப்பதினாயிரம் பேர் முப்படைகளில் இருந்தும் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கும், சிறிலங்காப் பொலிஸார் அவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல எனத் தெரிவிக்கின்றனர். அவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றிருப்பதுடன், ஆயுததாரிகளாக இருப்பதால் அவர்களை பொலிஸாரால் நெருங்கமுடியாது எனவும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில், ஜேர்மனிய பிரஜை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், ஒரு ஜேர்மனியப் பெண்மணி பாலியல் பலாத்காரம் புரியப்பட்ட சம்பவத்தில், தலைமறைவான இராணுவத்தினர் இருவர் சம்பந்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் பெமிலியகொடவில் 59வயது பெண்மணி கொல்லப்பட்டு, அவரது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தில் தலைமறைவான கடற்படையினன் சம்பந்தப்பட்டுள்ளான். பத்தறமுல்லையில் வங்கிக்கொள்ளை முயற்சியில் தலைமறைவான இராணுவமும் பொலிசும் கூட்டாக ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் வாரத்தில் மட்டும், தலைமறைவான படையினர் சம்பந்தப்பட்ட ஏழு கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என, சிறிலங்காப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் கண்டனங்களைப் புறந்தள்ளிவிட்டு, குற்றச் செயல்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவது குறித்து, சிறிலங்கா அரசு சிந்திக்கும் அளவிற்கு, தென்பகுதியில் அதிகரித்துவரும் குற்றச்செயல்கள், சிங்களத்திற்குப் பெரும் தலைவலியாகியுள்ளது என்பது வெளிப்படை.

முன்புபோல், படைக்கு ஆட்கள் சேர்க்கும்போது, அவர்களின் பின்புலம், மற்றும் நன்னெறிகள் குறித்து, தற்போது ஆராயப்படுவதில்லை. பெரும் தொகையில் ஆட்கள் சேர்க்கப்படுவதும், ஆட்சேர்ப்பு அவசரஅவசரமாக மேற்கொள்ளப்படுவதும், இவற்றை ஆராய்ந்துபார்க்க முடியாமல் போய்விடுகின்றது எனத் தெரிவிக்கும் பொலிஸ்தரப்பு, சமூகக் குற்றங்களுக்கு இவையும் காரணம் எனத் தெரிவிக்கின்றது.

தலைமறைவான படையினர், நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நவீன ஆயுதங்களை தம்முடன் கொண்டுசென்றுள்ளனர் என, சிறிலங்காப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில், பின்தங்கிய நிலையில் இருக்கும், குண்டர்களையும், குற்றவாளிகளையும், நவீனமயப்படுத்தி அனுப்பும் காரியத்தைத்தான் சிறிலங்கா இராணுவம் செய்துகொண்டிருக்கின்றது. தமிழர் பகுதியில், சாத்தியப்படாதபோது, அவர்கள் தம் கைவரிசையை சிங்களப்பகுதியில் மேற்கொள்வர், நவீனமயப்பட்ட குற்றவாளிகளாக. ■

இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முழுமையான விருப்புடன் யுத்தநிறுத்தத்தை நிராகரித்தாரா? அன்றி சமரச முயற்சிகளை கைவிடவோ அல்லது ஒத்திவைக்கப்படவோ சம்மதித்தாரா என்பவை சில சமயங்களில் கேள்விகளாக எழத்தக்கவையாக இருப்பினும், ஜனாதிபதி என்ற ரீதியிலும், அமைச்சரவையின் தலைவர் என்ற ரீதியிலும் அவரே இதற்கு முழுப்பொறுப்பும் ஆகும்.

இந்நிலையில் சந்திரிகா நாட்டில் இல்லாத போதோ அன்றி திரும்பிய பின்னரோ யுத்தநிறுத்தம் குறித்த நிராகரிப்பும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தடைகளை நீக்கமுற்படாமையும் சந்திரிகா குமாரதுங்கவும் இதே நிலைப்பாட்டையே முழுமையாகக் கொண்டிருந்தார் என்பதையே வெளிக்காட்டுவதாக இருந்தது.

கடந்த ஆண்டின் இறுதியில், நோர்வேயை சமரச முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சிறீலங்கா அரசு அழைத்தவேளை, சிறீலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டில் ஒரு பெரும் இராணுவத் தோல்வியைச் சந்தித்துவிடுமோ என்ற அச்சம் சிறீலங்கா அரசிடம் இருந்தது. அன்று அண்டை நாடுகள் உட்பட உலகிலுள்ள நட்புநாடுகளிடம் அரசு அத்தோல்வியைத் தடுத்து நிறுத்த உதவிடுமாறு கெஞ்சிக்கேட்டுக் கொண்டது.

இந்த ரீதியில் பல நாடுகள் சிறீலங்கா அரசிற்கு அன்பளிப்பாகவும், கடனாகவும் பெரும்தொகை நவீன ஆயுதங்களையும், போர் உபகரணங்களையும் வழங்கின. இவ்வாறு பெறப்பட்ட உதவிகள் சிறீலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டில் தமது நிலைகளை ஓரளவு தக்கவைக்க உதவின.

ஆயினும், யாழ். குடாநாட்டிலும் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் 1999இன் பிற்பகுதியிலும், 2000இன் முற்பகுதியிலும் இராணுவம் அடைந்த கறைபடிந்த வரலாற்றுத் தோல்விகள், இராணுவத்திற்கும்-புலிகளுக்கும் இடையிலான சமநிலையைப் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாக்கியிருந்தது எனலாம். அதாவது, களமுனையில் விடுதலைப் புலிகளின் கையோங்கி இருந்தது.

இந்நிலையில் சிறீலங்கா இராணுவம் யாழ். குடாநாட்டில் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும், விடுதலைப் புலிகளுடன் சமநிலைப்படுத்திக் கொள்ளவும் வேண்டிய கட்டாயத்தில் இருந்தது. இவற்றைப் புதிதாகக் கொள்வனவு செய்துள்ள நவீன ஆயுத தளபாடங்கள் மூலம் மேற்கொள்ளலாம் என அது கருதியது.

இதன் வெளிப்பாடாகவே, தென்மராட்சி மேற்கில் சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் ஆகும். இந்நடவடிக்கைகள் இராணுவத்தரப்பிற்கு சிறிது தெம்பைக் கொடுப்பதாகவும் இருந்தது. ஆனால், இவ்வெற்றிகள் மட்டும் விடுதலைப் புலிகளுடன் இராணுவரீதியிலான சமநிலையை உருவாக்கிவிட மாட்டாது எனக் கருதப்பட்டது.

இதனை அரச தரப்பும் புரிந்துகொண்டே இருந்தது. இந்நிலையில் ஆனையிறவை மீளப்பிடித்தால் மட்டுமே இராணுவ ரீதியில் புலிகளுடன் சமப்பட முடியுமென பொதுவாக சிறீலங்கா அரசியல் இராணுவ வட்டாரங்களில் அபிப்பிராயம் காணப்படுகின்றது.

இதனைச் சிறீலங்கா பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் சில கூற்றுக்களே உறுதிப்படுத்துபவையாக இருந்துள்ளன. எடுத்துக்காட்டாக கடந்த ஆண்டில் பிரதமராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலுக்கு முன்பாக ஒக்-10க்கு முன் ஆனையிறவு மீண்டும் கைப்பற்றப்படுமென அவர் உறுதி கூறினார். இது ஆனையிறவின் வீழ்ச்சியானது சிறீலங்காத் தரப்பில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது என்பதைப் புரியவைக்கப் போதுமானதாகும்.

அதாவது, ஆனையிறவு பறிபோனமை மிகப்பெரும் ஒரு இராணுவத் தோல்வியாகவும், இராணுவச் சமநிலையைக் குழப்பியதொரு பின்னடைவாகவுமே சிறீலங்காத் தரப்பில் நோக்கப்படுகின்றது. இதனால், இத்தோல்வியை ஈடுகட்டி இராணுவச் சமநிலையைச் சீர்செய்ய வேண்டுமெனின் ஆனையிறவு மீண்டும் கைப்பற்றப்படுதல் வேண்டுமென அது கருதுகின்றது.

இதனைத் தவிர, ஆனையிறவு புலிகள் வசம் இருப்பது யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் இருப்பை எவ்வேளையிலும் கேள்விக்குள்ளாக்கலாம் என்ற அச்சமும் இராணுவத்தரப்பில் உண்டு. இந்நிலையில் ஆனையிறவிற்கு வெளியில், அதாவது குடாநாட்டிற்கு வெளியில் விடுதலைப் புலிகளை தள்ளிவிடுவதற்கு முன்னர் பிரச்சார ஊடகங்களை எவ்வாறு தான் பயன்படுத்திக்கொண்டாலும் இராணுவத்தின் இழப்பு தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கின்றது.

இந்நிலையில்தான் சிறீலங்கா அரசும் இராணுவமும் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டைகளைப் போட முயல்கின்றன. சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய வேளையிலும் சரி/ நடத்த முனைந்த வேளைகளிலும் சரி அது தான் இராணுவ மேலாதிக்க நிலையில் இருப்பதாகக் கருதியதோடு, இராணுவத்தின் பிடியைத் தளர்த்திக் கொள்ளாமலுமே பேச முனைந்தது.

ஆனால், தற்போதைய இராணுவச் சூழ்நிலை அவ்வாறாக இல்லை. இதனால், ஒரு சமநிலை உருவாகும் வரையிலோ அன்றி தனது கைமேலோங்கும் வரையிலோ சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அது ஈடுபடத் தயாராக இருக்கப்போவதில்லை. யுத்தத்தை தொடரவும் அது முற்பட்டு நிற்பதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

ஆகையினால்தான், புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை நிராகரித்துள்ளதோடு, நோர்வேயின் சமாதான முயற்சிகளை பின்தள்ளவும் முற்பட்டுள்ளன எனலாம். வேறுவிதமாகக் கூறுவதானால், தனது இராணுவ நிலையைச் சீர்செய்யவும், யாழ். குடாநாட்டில் தனது இருப்பை இராணுவரீதியில் உறுதிசெய்து கொள்வதற்காவும்- இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்படுத்தக்கூடிய வகையில் உருவாகிவந்த சூழ்நிலையை சந்திரிகா அரசாங்கம் ஊதாசீனம் செய்துவருகின்றது. அதாவது, பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்பை அரசு தட்டிக்கழித்து வருகின்றது. ■

**ஜெயராஜ்**

## சிங்களப் படையால் சிதைக்கப்படும் தமிழர்களின் வாழ்விடங்கள்

சிறீலங்கா இராணுவம் யாழ் குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியிலுள்ள 300ற்கும் அதிகமான வீடுகளை புல்டோசர்கள் கொண்டு அழித்து நாசமாக்கியுள்ளது. அரியாலை கொழும்புத்துறைப் பகுதிகளில் கடந்த வருடத்தின் முற்பகுதியில் போர் நெருக்கடிகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளே இவ்வாறு இராணுவ நலன்களுக்காக அழிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி இப்பகுதிகளுக்கு முன்னேறிய இராணுவத்தினரே தமது முகாம்கள் தொடர்காவலரண்கள் என்பனவற்றிற்காக 300வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். அது மாத்திரமன்றி இவ்விரு கிராமங்களிலும் உள்ள பயன்தரு மரங்களையும் பாதுகாப்பு நிலைகளை அமைப்பதற்கென அழித்துள்ளனர். இதனால் ஏறக்குறைய 2000 தமிழர்கள் நிரந்தரமாக வீடுகளை இழக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

## நிமலராஜனைக் கொன்றவர்களை அரசு கண்டுபிடித்துத் தண்டிக்கவில்லை

சுதந்திர ஊடகவியலாளர் முன்னணி கண்டனம்

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் பொது ஜன முன்னணி அரசானது போதிய அக்கறை காட்டாதது குறித்து சுவரொட்டிப் போராட்டம் ஒன்றை 19.01.2001இலிருந்து ஆரம்பிக்க உள்ளதாக சுதந்திர ஊடகவியலாளர் முன்னணி அறிவித்துள்ளது. நிமலராஜன் கல்வி கற்ற இரத்மலானை இந்துக்கல்லூரியில் நடந்த அவரது நினைவு நிகழ்ச்சியின்போது கலந்து கொண்ட றாவய பத்திரிகையாளரான ஜெயசிறி ஜெயசேகர குறிப்பிடுகையில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் வேண்டுமென்றே நிமலராஜன் விடயத்தில் காலத்தைக் கடத்துவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## விசேட அதிரடிப்படையின் தளபதி மரணம்

தென்தமிழீழத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்குக் காரணமான முன்னாள் விசேட அதிரடிப்படையின் தலைமை அதிகாரியான உதவிப் பொலிஸ் பணிப்பாளர் லயனல் கருணாசேன உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் 21.01.2001 அன்று மரணமானார். இவர் மரணமடைந்த வேளையில் பொலிஸ் திணைக்களத்தின் கட்டளை பீடத்தில் இரண்டாவது நிலையில் இருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கேணல் கிட்டு நினைவாக தமிழகத்தில் சுவரொட்டிகள்

இந்தியச் சதியால் வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கிட்டு மற்றும் 9 தோழர்கள் நினைவாக சுவரொட்டிகள் தமிழகம் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன. பொங்கலுக்கு அடுத்த நாளான 16ஆம் திகதி ஈழத்தமிழர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் மண்டப முகாம் பகுதிகளிலும் கிட்டண்ணா நினைவெழுச்சி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சர்வதேச நிதிகள் நிறுத்தப்பட்ட நிலையில் சிறீலங்காச் செஞ்சிலுவைச் சங்கம்.

சிறீலங்காச் செஞ்சிலைச் சங்கம் சர்வதேச விதிகளுக்கு அமைய சர்வதே செஞ்சிலுவைச் சங்கத்தின அபிலாசைகளை பூர்த்தி செய்யும் என்று உறுதிப்பாட்டுடன் பணியாற்ற முன்வருமாயின் அதற்கு மக்கள் நலப் பணிகளுக்கான நிதியுதவி வழங்கப்படும். அது வரைக்கும் சகல உதவிகளையும் நிறுத்துவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைக்காரியாலயம் சிறீலங்காச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு மீட்புப்பணிகளில் சிறீலங்காக் கிளை போதிய கவனம் எடுப்பதில்லை என கண்டனம் தெரிவித்துள்ளதோடு, அதனால் செயற்படாத சிறீலங்காக் கிளைக்கு நிதியனுப்புவதை இடைநிறுத்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்காரணமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நேரடியாகவே அண்மையில் நடந்த சூறாவளிப் பாதிப்புக்களுக்கான மீட்புப் பணிகளில் ஈடுபட்டது. அது உள்நாட்டுக் கிளையிடம் உதவி நிதிகளை வழங்க விரும்பவில்லை. அது செயற்படாத தனிப்பட்ட ஒரு குழுவினராக சிறீலங்காச் செஞ்சிலுவைச் சங்கத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இனம் கண்டுள்ளது. இதன் காரணமாகவே 110மில்லியன் ரூபா பெறுமதியான உதவி நிதியானது சிறீலங்காக் கிளைக்கு வராமல் செலவிடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகவே இழுபறிகள் சிறீலங்காக் கிளையில் இருந்து வந்துள்ளன. அதுவும் கடந்த வருடம் இருந்த சுகாதார அமைச்சர் ஒரு நிர்வாகக் குழுவை அமைத்தார். இம்முறை வந்துள்ள புதிய அமைச்சரோ புதிய குழுவை அமைப்பதற்கு வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ளார். இதனையடுத்து பழைய அமைச்சரின் குழு உச்சநீதிமன்றம் சென்று இந்த அறிவித்தலுக்கு தடை விதித்துள்ளது.

சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இலங்கைச் செஞ்சிலுவையிலும் அரசியல் புகுந்து விளையாடுவதாக சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் செயலர் கெர்வின் புலுத் சிங்கள குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ அழுத்தங்களால் நொருங்கிப் போகும் யாழ் நகர்

*யாழ் நகரில் இருந்து பி.பி.சி செய்தியாளர் பிரான்ஸிஸ் கரிசன்*

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத் தலைமைச் செயலகத்தில் பதக்கங்களுடன் கூடிய சீருடை அணிந்த சிங்களப்படை வீரர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். பெண்சிப்பாய்கள் தேசியகீதம் இசைக்க அவர்கள் தங்களுடைய யுத்த வீரர்கள் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இவர்களில் பலருக்கு யுத்தம் நல்ல வருமானம் தரும் தொழிலாகவே இருக்கின்றது.

சுடுவலுவே எமது அண்மைய வெற்றிகளுக்கு முக்கிய காரணம் என்று கூறினார் யாழ் மாவட்ட இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா. கொழும்பிலிருந்து தமது அண்மைய வெற்றிகளை சுற்றிக் காட்டுவதற்கென பத்திரிகையாளர்களை இராணுவம் அழைத்து வந்திருந்தது, அவர்களிடையே மேஜர் ஜெனரல் உரையாற்றுகையில், நாங்கள் போராளிகளை எமது நகரத்தின் சுடுதூரத்திற்கு அப்பால் விரட்டிவிட்டோம் அவர்களால் எமக்கு ஆபத்து இல்லை என்கிறார்.

ஆனால் இராணுவ ஆய்வாளர்களோ இராணுவம் உண்மையில் வெற்றி பெறவில்லை என்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கு இந்தப் பிரதேசங்கள் தேவையில்லை, இதனால் அவர்கள் இந்த இடத்தை விட்டுப் பின்வாங்கினார்கள். ஆனால் அரசோ தனது பிரச்சார யுக்திக்காக பெருமளவு இராணுவத்தினரை இராணுவ, அரசியல்ரீதியாக முக்கியத்துவம் இல்லாத இடத்தில் குவித்துள்ளது என்கிறார்கள்.

இப்போது போரில் சிறிய நடுத்தர ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது கிடையாது. அரச துருப்புக்கள் பல்குழல் எறிகணைச் செலுத்திகள் சகிதம் யுத்தத்தினை எதிர்கொள்கின்றனர். இதனால் போரில் யாழ் மக்கள் படும் அவலங்கள் சொல்லி மாளாது என்கிறார் யாழ் ஆயரான தோமஸ் சவுந்திர நாயகம் அவர்கள்.




# பொங்

## மட்டக்களப்பில்

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டின்பேரில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவாக கிழக்குப் பல்கலைக்கழக சமூகமும் தனது குரலை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த 17.01.2001 புதன்கிழமை அன்று அமைதிப் போராட்டம் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியரல்லாத பல்கலைக்கழக ஊழியர்கள் என்போர் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். இவ் அமைதிப் போராட்டத்தில் உரையாற்றியவர்கள் அனைவரும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்திருந்ததோடு விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்திற்கு ஆக்கபூர்வமான பதிலை சிறீலங்கா அரசாங்கம் அளித்து சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கோரினர். இதேகருத்தை ஒட்டிய கோசங்கள் அடங்கிய பதாகைகள் சுவரொட்டிகள் என்பன மாணவர்களால் எடுத்துவரப்பட்டிருந்தன. இறுதியாக இந்நிகழ்வின்போது கிழக்கு



பல்கலைக்கழக சமூகத்தால் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. இப்பிரசுரத்தில்,

தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு தீர்வுத்திட்டத்தை அரசு வழங்கவேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அரசு அங்கீகரிக்க வேண்டும்.

சிறீலங்கா அரசானது தமிழர்மீதான தாக்குதல்கள், கைதுகள், சிறையில் அடைத்தல் மற்றும் படுகொலை செய்தல் என்பனவற்றை உடன் நிறுத்த வேண்டும்.

மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## வவுனியாவில்

யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும், வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்களும் இணைந்து பொங்குதமிழ் நிகழ்விற்கான பேரணியையும், பொதுக் கூட்டத்தையும் கடந்த 17.01.2001 அன்று நடத்தினர். நூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தமிழர்களுடைய சுயாதிபத்தியத்தையும் பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிக்கவும், விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை நல்லெண்ண சமிக்ஞையாக கருத்தில் எடுத்து அரசை உடன் பேச்சுவார்த்தை நடத்தவும் என கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இந்நிகழ்வின் இறுதியில் இறம்பைக்குளம் கத்தோலிக்கத் தேவாலய வணபிதா ஜெயபாலன், யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறைப் பீடாதிபதி திரு. ச. நந்தகுமார் உட்பட பலர் உரையாற்றினர்.

## அவுஸ்திரேலியாவில்

கடந்த 17.01.2001 அன்று அவுஸ்திரேலியாவின் இரு இடங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள சகமாணவர்களின் உணர்வலைகளோடு தமது பிணைப்பைக் காட்டுவதற்கும் அவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் மெல்பேர்ணில் விக்டோரியா மாநிலத்தின் பாராளுமன்றத்திற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்வில் 400ற்கும் அதிகமான தமிழ் மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இதேவேளை சிட்னியில் நடந்த நிகழ்வில் 250 தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.




விடுதலைப் புலிகள் இயக்கம், நோர்வே நாட்டின் சமாதான முன்னெடுப்பை வரவேற்று, அதனை மேலும் முன்னோக்கி நகர்த்திவிடும் வகையில் ஒரு மாதகால யுத்தநிறுத்தம் ஒன்றை ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. டிசம்பர் 24ம் திகதியில் இருந்து சனவரி 24ம் திகதிவரைப்பட்ட இந்த ஒருமாதகாலப் பகுதியில், சிறீலங்காப்படையினருக்கு எதிராக போர் நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை என விடுதலைப் புலிகள் அறிவித்தனர். ஆனால், இதுகாலவரையும் சமாதானத்தைக் கண்டுவிட தனது அரசு துடியாய்த் துடிக்கின்றதெனவும், சமாதானத்தை நிலைநாட்டவே போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், விடுதலைப் புலிகளை சமாதான மேசைக்கு கொண்டுவர போர் நடவடிக்கை அவசியமானது எனவும் கூறி உலகை ஏமாற்றிவந்த சந்திரிகா அம்மையார், விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பால் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டார். தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதும், இனஅழிப்பை விஸ்தரித்து, முழுத்தீவையும் சிங்கள பௌத்த நாடாக ஆக்கிவிடத்துடிக்கும், சிங்களப் பேரினவாதத்திற்கு தலைமையேற்றுள்ள ஒரு இனவாதி என்ற தோற்றம் வெளிப்பட ஆரம்பித்தது. சிங்கள பௌத்த நலன்களையும், அதன் விருப்பையும் கருத்தில் கொண்டுள்ள சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை நிராகரித்ததோடல்லாமல், விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, படை நடத்துகைகளை மேற்கொண்டு, தமிழர் பூமியை மேலும் ஆக்கிரமிக்க முற்பட்டது.


விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தல் சர்வதேச சமூகத்தின் வரவேற்பைப் பெற்றது என்பதுடன், சிங்கள அரசு பற்றி சர்வதேச சமூகம் வைத்திருந்த மதிப்பீடுகளையும் அது வெகுவாகப் பாதித்தது. பெரும் இரத்தக்களரியையும், அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தும் இந்தப் போருக்கு முடிவுகட்டக்கிடைத்த இறுதிச் சந்தர்ப்பத்தையும் நிராகரித்துவிட்டு, போரை நடத்தப் பிரியப்படும் சிங்கள அரசின் உண்மையான தோற்றத்தையும், அதன் இனஅழிப்பு நோக்கத்தையும் சர்வதேச சமூகம் சரிவரப் புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பையும் இந்தப் போர்நிறுத்த அறிவித்தல் ஏற்படுத்தியிருக்கின்றது.

சர்வதேச சமூகம் தமிழீழப் பிரச்சினையில் அதிக அக்கறை காட்டிவரும் இந்தக் காலகட்டத்தில், சமாதான முன்னெடுப்புக்களை, அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் வலியுறுத்திவரும் இக்காலகட்டத்தில், தமது அபிலாசைகளை, தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. தமிழ் மக்களின் அபிலாசைகளை, அவர்களின் சுதந்திர அவாவை தமது புனித இலட்சியமாகக் கொண்டு, அதனை தமது பிரதான அரசியல்கோட்பாடாக வரித்துக்கொண்டு, அதனை வென்றெடுக்க பாரிய உயிர் அர்ப்பணிப்புகள், அளப்பரிய தியாகங்களைப் புரிந்து, பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து போராடி வருபவர்கள் விடுதலைப் புலிகள் என்பதையும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதையும், சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கவேண்டிய கடமையும் தமிழ் மக்களிற்கு இருக்கின்றது.

இந்தப் பொறுப்புணர்வின், கடமையின் வெளிப்பாடாக, யாழ் பல்கலைக்கழக சமூகமும், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து மேற்கொண்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி, நிகழ்கால அரசியல் தளத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. தமிழ் மக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறு எனவும், புலிகள் மாத்திரம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தமுடியாது எனவும், புலிகளின் பயங்கரவாதப் பிரச்சினையை போர் மூலம் முடிவுக்குக் கொண்டுவரும் அதேவேளை, தமிழரின் பிரச்சினைக்கு அரசியலமைப்புச் சீர்திருத்தம் மூலம் தீர்வு காணப்படும் எனவும், உண்மைக்கு மாறாக யதார்த்தத்திற்குப் புறம்பாக சந்திரிகா அரசு புலம்பிவருவதற்கு, யாழ் பல்கலைக்கழக சமூகமும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து மேற்கொண்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி துணிந்து பதிலிறுத்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை சிறீலங்கா அரசு நிராகரித்த கையுடன், டிசம்பர் 29ம் திகதி, யாழ் பல்கலைக்கழக சமூகம், எழுச்சி நிகழ்ச்சியை ஆரம்பித்தது.

போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசு என்பது பிரதான கோசமாக இருந்தது. பேச்சுவார்த்தையானது, தமிழ்



மக்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு அதனை அடிப்படைகளாக வைத்துக்கொண்டு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை பல்கலைக்கழக சமூகம் வலியுறுத்தியது.

**தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்.**

**அவர்கள் மரபுவழித் தாயகத்தைக் கொண்டவர்கள்.**

**அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.**

தமிழ் மக்களின் அபிலாசையான இந்த அடிப்படைக் கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் தளத்தில் இருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி, பல்கலைக்கழக சமூகம் தனது எழுச்சி நிகழ்வை ஆரம்பித்தது.

எழுச்சி நிகழ்ச்சிக்கு, தடைகளை ஏற்படுத்த நெருக்கடிகளைக் கொடுத்து அதனைக் கைவிடச் செய்ய, சிங்கள அரசின் இராணுவமும், அதன் கைக்கூலிக்குழுவான ஈ.பி.டி.பி.யும் வெகுவாக முனைந்தன. இருந்தபோதும் மாணவர்களின் போராட்டம் மேலும் மேலும் எழுச்சி பெற்றது.

அதன் தொடர்ச்சியாக, சனவரி 17ம் திகதி, பொங்குதமிழ் என்ற வெகுசனப்போராட்டத்தை நடத்த பல்கலைக்கழக சமூகம் தீர்மானித்தது. யாழ் பல்கலைக்கழக சமூகத்துடன், குடாநாட்டில் இயங்கும் நாற்பத்தேழு மனிதநேய அமைப்புக்களும் இணைந்துகொண்டன.

மாணவ சமூகத்தில் ஆரம்பித்து, பல்கலைக்கழக சமூகமாக விரிந்து, அது வெகுசன எழுச்சியாக உருவாகிவருவதைக் கண்டு, சந்திரிகா அரசு பெரிதும் சினங்கொண்டது. இராணுவத்தையும், ஈ.பி.டி.பி. கூலிக்குழுவையும் ஏவி, இந்த வெகுசனப் போராட்டத்தை நசுக்கிவிட சந்திரிகா திட்டமிட்டார்.

எழுச்சிப் போராட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஈ.பி.டி.பி. கூலிக்குழு, வலிகாமப் பகுதிகளில், ஒலிபெருக்கி வாயிலாக பொதுமக்களை எச்சரித்தது. பொங்குதமிழ் நிகழ்ச்சியில் யாரும் கலந்துகொள்ளக்கூடாது எனவும் கலந்துகொள்வோர் தண்டிக்கப்படுவர் எனவும், எஜமான விசுவாசத்தோடு அது மக்களை மிரட்டியது.

ஆனால் எழுச்சி நிகழ்ச்சி மேலும் எழுச்சி பெற்றது. சமூகத் தலைவர்கள், மதத்தலைவர்கள், சங்கங்கள், அமைப்புக்கள், பொதுமக்கள் என, அனைத்துத் தரப்பினரும் மாணவர்களின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மாணவர்கள் மக்கள் மத்தியில் சென்று வெகுசன எழுச்சிக்கு மக்களைத் திரட்டும் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டனர்.

சந்திரிகா அரசு உசாரானது. தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் நிகழ்வான பொங்குதமிழ் எழுச்சியை காழ்ப்புடன் பார்த்த சந்திரிகா அரசு, முக்கியமான இக்காலகட்டத்தில், தமிழர்களின் வெகுசன எழுச்சி, பெரும் நெருக்கடியை தரவல்லது என்பதை உணர்ந்துகொண்டது.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சிக்கு தாம் அனுமதி அளிக்கப்போவதில்லை என, வடபகுதிக்கான இராணுவத்தளபதி

# குதமிழ்





மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, சனவரி 10ம் திகதி, பலாலியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார். தமிழ் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பணி அவர்களுடையதன்று, அவர்களுடைய வேலை படிப்பது மாத்திரம் தான் என்று, கூறிய விஜேந்திரா இதற்குப் பின்னால் புலிகளின் தூண்டுதல் உண்டு என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 51வது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரா மாணவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து மிரட்டினார். குறிப்பிட்ட நாளில் ஊர்வலமோ, கூட்டமோ நடத்த முடியாது என்று மிரட்டியதுடன், வேண்டுமானால், ஒரு மாதம் கழித்து, பொங்குதமிழ் நிகழ்ச்சியை வைத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். ஆனால், இந்த மிரட்டல்களுக்கும், காலம்கடத்தி போராட்டத்தை மலினப்படுத்தும் தந்திரத்திற்கும் அடிபணியாத பல்கலைக்கழக சமூகம், போராட்டத்தை நடத்தியே தீருவதென்று அறிவித்தது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்கசைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், யாழ் பொலிஸ் நிலையத் தலைமையதிகாரியால் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். பொங்குதமிழ் நிகழ்ச்சியில் பொதுமக்கள் கலந்துகொண்டால், துப்பாக்கிச் சூடு நடத்தவும் தாம் தயங்கப் போவதில்லை என, கிராமசேவையாளர்களுக்குத் தெரிவித்த பொலிஸ்நிலையத் தலையதிகாரி, இதனைப் போய் உங்கள் பகுதி மக்களிடம் தெரியப்படுத்துங்கள் எனத் தெரிவித்தார்.

அதேபோன்று, சண்டிலிப்பாய், வலிகாமம் மேற்கு கிராம சேவையாளர்களை பொலிஸ் நிலையம் அழைத்திருந்த மானிப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, மேற்கண்டவாறு எச்சரிக்கையை விடுத்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் சுற்று வட்டாரங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இராணுவத்தினர் சோதனைச் சாவடிகளில் விழிப்பாய் இருந்தனர். பல்கலைக்கழகம் செல்லும் வீதிகளின் சந்திகளிலும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர்.

17ம் திகதி காலை, மிகுந்த பரபரப்புக்குரித்தான அந்த நாளில், அறிவித்தபடி, பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், துணைவேந்தர், பல்கலைக்கழக ஊழியர்கள் திரண்டனர்.

பொங்குதமிழ் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்ற மதத்தலைவாகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்களை, இராணுவத்தினரும் பொலிஸாரும் வழிமறித்துத் திருப்பி அனுப்பினர். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அங்கு என்னவேலை எனக்கேட்டு, சிங்களப்படையினர் அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

சிங்களப்படையின் கண்களில் மண்ணைத்தூவி, மாற்றுவழிகளாலும், குறுக்குவழிகளாலும், மதிலேறிப் பாய்ந்தும், பல்கலைக்கழக வளாகத்தில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

காலை 10.30மணிக்கு, சுதந்திர தீபத்தை ஏற்றிவைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த, யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், பல்கலைக்கழக சமூகம் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என, தனது உரையில் தெரிவித்தார். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் வணிகபீடத் துணைத்தலைவருமான ப. தேவராஜ், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்ச்சியில், யாழ் குடா திறந்தவெளிச் சிறைச்சாலை என்பதைச் சித்தரிக்கும், குறியீட்டு நாடகம் ஒன்றும் நிகழ்த்திக்காட்டப்பட்டது. முட்கம்பி வேலிகள் சுற்றிலும் இருக்க, நடுவில் குளிர்பதனப்பெட்டி, தொலைபேசி, மின்விசிறி என்பவை வைக்கப்பட்டிருந்தன. மக்களை அடிமைப்படுத்தியபடி, சலுகைகள் காண்பித்துவரும், இந்த அடக்குமுறை அரசை, மக்கள் வெற்றிகொள்வதுபோல நாடகம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

பொங்குதமிழ் நிகழ்ச்சியில், பெருந்தொகையில் பொதுமக்கள் கலந்துகொள்ள முடியாதவாறு, தடைகளைப் போட்டும், கொலைப்பயமுறுத்தல், சட்டமிரட்டல்களை மேற்கொண்டு சிங்கள அரசு தடுக்க முனைந்தாலும், பொதுமக்கள் தமது உளஎழுச்சியை வெளிப்படுத்தினர். குடாநாட்டில், தேவாலயங்கள் கோவில்களில் மதியம் மணிகள் ஒலிக்கவிடப்பட்டு, விசேட பூசைகள் நடாத்தப்பட்டன. யாழ் நகரத்திலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும், வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை பூட்டிவைத்து, பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்கினர்.

பொங்குதமிழ் நிகழ்ச்சி, யாழ் குடாநாட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்து, தமிழீழ மாணவ சமூகம், தமிழீழத்திலும், உலகில் பலபாகங்களில் இருந்தும் குரல்கொடுத்தது. கனடா அவுஸ்திரேலியா நாடுகளில், பலநூற்றுக்கணக்கான மாணவர்கள் பொங்குதமிழ் நிகழ்சிக்கு ஆதரவு தெரிவித்து போராட்டங்கள் நடத்தினர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து, அதே நாளில் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம், அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் கலந்தகொண்ட இந்நிகழ்வில், விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு 2நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதேநாளில், வவுனியாவிலும் மாணவர்கள், பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்து எழுச்சி நிகழ்ச்சியை நடத்தினர். யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களும், வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்களும் நடத்திய இவ் எழுச்சிநிகழ்வுகளில், பொருளியல் பீடாதிபதி எஸ்.நந்தகுமார், இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ஜெயபாலன் அடிகளார், விரிவுரையாளர் ஜேசுரட்ணம், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றினர்.

'தமிழ் மக்களின் அடிமனத்தில் ஆழ்ந்துள்ள அபிலாசையானது, அவர்களின் நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கும்போது தமது சுயநிர்ணய உரிமை பற்றிய எழுச்சியையும் சிந்தனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில் அவர்கள் விழிப்படைந்து எழுச்சியுற்று வருகின்றார்கள்.' இவ்வாறு தனதுரையில் தெரிவித்தார் பொருளியல் பீடாதிபதி எஸ்.நந்தகுமார்.

'பொங்குதமிழ் நிகழ்ச்சி மூலம் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை இப்போது துளிர்த்துள்ளது. தமிழ் மக்களின் துன்ப துயரங்கள், அபிலாசைகள் குறித்து சர்வதேச நாடுகள் இப்போது உணர்ந்துவருகின்றன. எனினும் எம்மக்களின் உணர்வுகள் அபிலாசைகள் முறையாக வெளிப்படுத்தப்படவில்லை. இந்தக் குறைகளைத் தீர்ப்பதில் எமது அறிவுசார் சமூகம் இப்போது ஈடுபட்டுள்ளதன் வெளிப்பாடே பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சியாகும்.' இப்படியாக தனதுரையில் தெரிவித்திருந்தார் அருட்திரு ஜெயபாலன் அடிகளார்.

தமிழ்மக்கள் புலிகளை வெறுக்கின்றனர். அவர்கள் இராணுவத்தின் பாதுகாப்பில் அமைதியாக இருக்கவே விரும்புகின்றனர் என, எத்தனை நாளைக்குத்தான் சந்திரிகா கூறப்போகின்றாரோ தெரியவில்லை.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி புலிகளின் தூண்டுதலின் பேரில் நடத்தப்படுகின்றது எனவும், இதனை நடத்துவோர் புலிகளின் ஆட்கள் எனவும் சந்திரிகா கூறமுற்படுவதன் மூலம், புலிகளின் தாகமும் தமிழ் மக்களின் தாகமும் ஒன்றென்ற மறுக்கமுடியாத உண்மையை, அவராகவே ஒத்துக்கொள்ளும் நல்ல காரியத்தை அவர் ஆற்றுகின்றார்.

**வாழ்க பொங்குதமிழ்.** **-சுப்பு-**



படையினரால் திருப்பி அனுப்பப்பட்ட மதகுருமார்

## பொங்குதமிழ் நிகழ்ச்சி மாபெரும் வெற்றி

### 47 மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்

பல்கலைக்கழக சமூகத்தினர் குறுகிய காலத்தில் கடும் முயற்சியெடுத்து குடாநாட்டின் மூலைமுடுக்குகளுக்கும் சென்று மக்கள் மனதில் விழிப்புணர்ச்சியைப் பெருமளவில் வளர்த்தது ஒரு மாபெரும் வெற்றி. மேலும் பொதுமக்களை ஆயுத முனைக்குப் பலிக்கடாக்களாக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தமை, பொறுப்புணர்ச்சியுடனும், சாதுரியத்துடனும், சாத்வீகத்தைப் பேணும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டமையும் பாராட்டிற்குரிய வெற்றியாகும்.

பொங்குதமிழ் நிகழ்ச்சியில் பொதுமக்கள் கலந்து கொள்வதை அரசு நசுக்க முற்பட்ட போதிலும், யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் மக்கள் சுயமாக முன்வந்து தத்தம் இடங்களில் வர்த்தக நிலையங்களை மூடியும், சந்தைகளுக்குப் போகாமலும், தொழில்களுக்குப் போகாமலும் பாடசாலைகளைப் பகிஸ்கரித்தும் மதியம் பன்னிரண்டு மணிப் பிரார்த்தனையில் ஈடுபட்டும் வணக்கத்தலங்களில் மணிகள் ஒலிக்கச் செய்தும் உணர்வுபூர்வமாக தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். இது பொங்குதமிழ் நிகழ்ச்சிக்காக தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த அங்கீகாரம்.

## பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்கு பூரண ஆதரவு வழங்குகின்றோம்

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

தமிழ் மக்களின் அபிலாசைகள், யுத்த நிறுத்தம், மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்துடன் பேச்சு நடத்தல் தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழுதல் போன்றவற்றை முன்வைத்தும் உலகிற்கு இவ்விடயங்களை வெளிக்கொணர்வதற்காகவும் யாழ் பல்கலைக்கழக சமூகமும், யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து நடாத்தவிருக்கும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்கு எமது அமைப்பு பூரண ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கும்.

## கனடாவில் தமிழ் மாணவர்கள்








# ஓயாத அலைகள் -3 தொடர் நடவடிக்கையில் வன்னியின் வடமுனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

21.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். புதல்வன்**
அழகையா பஞ்சலிங்கம்
கந்தசாமி கோவிலடி, சித்தாண்டி- 03,
மட்டக்களப்பு.

**2வது லெப். குட்டிச்செல்வன்**
சின்னத்துரை விஜயகுமார்
நாவற்காடு, விளாவெட்டுவான்,
மட்டக்களப்பு.

23.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலின்போது வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். சிங்காதரன்**
பரசுராமன் மயூரன்
களுவாளை- 04, களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.

**கப். தில்லைக்குமார்**
தம்பிராசா பேரின்பநாதன்
தம்பலவத்தை, மண்டூர், மட்டக்களப்பு.

**2வது. லெப். வரதமூர்த்திக்ன்**
மயில்வாகனம் செல்வநாயகம்
தபாற்கந்தோர் வீதி, களுவங்கேணி-02,
மட்டக்களப்பு.

**லெப். பரவிதன்**
சொர்ணலிங்கம் ஜெகநாதன்
பெரியகொலனி, பன்குடாவெளி,
செங்கலடி, மட்டக்களப்பு.

**2வது. லெப். விகடகாவியன்**
சின்னத்தம்பி நவநாதன்
சந்திவெளி, செங்கலடி, மட்டக்களப்பு.

**லெப். வரிகரன்**
கந்தப்போடி சித்திரவேல்
திகிலிவெட்டை, சந்திவெளி, மட்டக்களப்பு.

**2வது. லெப். அருளன் (முகிலன்)**
அமிர்தலிங்கம் அஜந்தன்
கரம்பகம், எழுதுமட்டுவாழ், யாழ்ப்பாணம்.

**மேஜர் பேரின்பன்**
முத்துக்குமாரசுவாமி சிவநாராயணன்
02ம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு, முல்லை
(கைதடி தெற்கு, கைதடி, யாழ்)

16.12.1999 அன்று பரந்தன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப். தயா**
சுந்தரலிங்கம் ஜெயமோகன்
1ம் படிவம், கல்மடு, இரணைஇலுப்
பைக்குளம், வவுனியா.

18.12.1999 அன்று தனங்கிளப்புப் பகுதியில் நடந்த மோதலின்போது வீரச்சாவடைந்தவர்கள்.

**மேஜர் கதிரொளி**
தனபாலசிங்கம் சுஜீவன்
7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.

11.12.1999 வெற்றிலைக்கேணி பகுதியில் நடந்த மோதலில் வீரசாவடைந்தவர்கள்.

**வீ.வே. அனல்வேங்கை**
சாந்தலிங்கம் ஜெயசிறி
10ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

**கப். ஜெயந்தி**
அருணகிரி தவமலர்
பழுகாமம், பெரிய போரதீவு, மட்டக்களப்பு.

**கப். சபேசினி**
சிதம்பரப்பிள்ளை ஜசோதா
முதலிக்குடா, கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

**வீ.வே. மணிகரன் (ஜனகராஜ்)**
வேதநாயகம் தசரதன்
பொறுகாமம், வெல்லாவெளி, மட்டக்களப்பு.

**2வது. லெப். ஜீவஜோதியன்**
கணேஸ் சதீஸ்வரன்
பெரியநீலாவணை, மட்டக்களப்பு.

**2வது. லெப். குணவேலன் (குணராஜன்)**
முருகுப்பிள்ளை இந்திரராசா
தேவாபுரம், மொறக்கொட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.

**கப். காவேரிநாடன்**
சோமானந்தாப்பிள்ளை டிசியானந்தன்
பாலிப்போடியார் வீதி, சந்திவெளி,
மொறக்கொட்டாஞ்சோனை, மட்டக்களப்பு.

**லெப். கேணல். சிவமோகன்**
சதாசிவம் கிருபாகரன்
மாவடிவேம்பு, சித்தாண்டி,
மொறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு.

**2வது. லெப். கலாவரதன்**
கணபதிப்பிள்ளை பாக்கியராசா
முருகன்கோவில் வீதி, குளத்துமேடு,
வாழைச்சேனை, மட்டக்களப்பு.

**கரும்புலி மேஜர் செழியன்**
மகேந்திரராஜா பாலமுரளி
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

19.12.1999 பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப். ஈழச்செழியன்**
சண்முகநாதன் சுரேஸ்காந்தன்
02ம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

11.12.1999 அன்று கட்டைக்காடுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**கப். பிறையன்**
தவராசா சுரேந்திரன்
பூநகரி, கிராஞ்சி, சிவபுரம், மன்னார்
(காளி கோவிலடி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில், யாழ்)

**கப். தேவசி**
நற்குணசிங்கம் தேவகி
நற்குணசிங்கம் ஜெயமதி
காளிகோவில் வீதி, ஏறாவூர் -04, மட்டக்களப்பு.

**கப். சாந்தி**
பத்மநாதன் விஜித்திரா
உதன்முலை, மொறக்கொட்டாஞ்சேனை,
சித்தாண்டி, மட்டக்களப்பு.

**லெப். கிருசாந்தினி**
கதிர்காமத்தம்பி காஞ்சனா
திருமலை வீதி, கதிரவெளி, மட்டக்களப்பு.

**லெப். கல்பனா**
கதிரமலை சுதர்சினி
களுவந்தன்வெளி, கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

**லெப். கோசலா**
வேல்மணி செல்வமலர்
திருக்கோவில், கலைமகள் வீதி,
விநாயகபுரம், மட்டக்களப்பு.

**லெப். மனோன்மணி**
அழகரட்ணம் சந்திரமதி
கோவிற்போரதீவு, பெரியபோரதீவு,
மட்டக்களப்பு.

**லெப். அன்பு**
கணபதிப்பிள்ளை உதயகுமாரி
மதுரங்குளம், பனிச்சங்கேணி, வாகரை,
மட்டக்களப்பு.

**2வது. லெப். சுதாஜினி**
பிள்ளையான் அன்னபாக்கியம்
மாரியம்மன்கோவில் வீதி, சாராவெளி,
கிண்ணையடி, மட்டக்களப்பு.

**2வது. லெப். கமலி**
செல்வநாயகம் தங்கமலர்
பட்டிப்பளை, மட்டக்களப்பு.

**2வது. லெப். கஜந்தா**
குழந்தைவேல் சாந்தி
முருகன்கோவில் பின் வீதி, சித்தாண்டி,
மட்டக்களப்பு.

**கப். மாருதி**
சந்தோசம்
மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

**வீ.வே. விஜிதா**
வடிவேல் சசி
உன்னிச்சை, மட்டக்களப்பு.

**வீ.வே. லோகா**
பதுளை வீதி, முதிரையடி ஏத்தம், பதுளை.

**வீ.வே. யாழ்விழி**
சண்முகராசா நாகேஸ்வரி
01ம் வட்டாரம், கரவல்குழி, திருமலை.

**வீ.வே. சபேக்கா**
தர்மலிங்கம் சுலோஜனா
காஞ்சிபுரம், கன்னங்குடா, மட்டக்களப்பு.

13.12.1999 கட்டைக்காடுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது. லெப். அகிலநாதன்**
வேல்முருகு சபாநாயகன்
பாடசாலை வீதி, அம்பிளாந்துறை,
மட்டக்களப்பு.

**லெப். கவிகரன்**
குணேஸ் ரவிச்சந்திரன்
2ம் குறுச்சி, வீரச்சேனை, பழுகாமம்,
பெரியபோறதீவு, மட்டக்களப்பு.

**மேஜர் ரஞ்சன்**
பாலசுந்தரம் பாலசிங்கம்
முனைக்காடு-07,கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

**2வது லெப். ஆதிச்செழியன்**
செல்வநாயகம் விஜியகுமார்
சாஸ்திரியார் வீதி, 3ம் குறிச்சி,
களுதாவளை, மட்டக்களப்பு.

18.12.1999 தாளையடிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**2வது.லெப். பேராலிங்கம்**
தம்பிரெட்னம் ஜெயராசா
பெரியகட்டு முனை, வாகரை,
மட்டக்களப்பு.

11.12.1999 சுட்டதீவுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். தவோதரன்**
இராசமாணிக்கம் சந்திரமோகன்
கடற்கரைவீதி, திருக்கோவில், அம்பாறை.

**2வது. லெப். மதுரகீதன்**
கிருஸ்ணபிள்ளை சிவாகரன்
3ம் குறிச்சி, களுதாவளை, களுவாஞ்சிக்-
குடி, மட்டக்களப்பு.

# வெளிவரத் தவறிய மெய்மை விளம்பரம்

(சிறீலங்காவின் புதிய இராணுவத் தளபதி தாம் போரில் வெல்வதற்கு 20,000 படையினர் தேவையென்று கூறியுள்ளார். இந்நிலையில் ஆட்சேர்ப்பதற்கு சிங்கள முப்படைகளின் தளபதியான சந்திரிகாவும், அவரின் புதிய தரைப்படைத் தளபதி லயனல் பலகல்லவும் வெளியிடத் தவறிய மெய்மை விளம்பரம் இதுவென தமிழீழக் கவிஞர் ஒருவர் தீட்டியபடைப்பிது)

தமிழர் கூரைத் தகடுகள் திருட,
சமையற் பாத்திரம் சட்டிகள் அள்ள
மின்வயர் ஆளிகள் விசிறிகள் திருட,
பொன்னகை, வானொலி,
பூட்டுடைத்தள்ள

இன்றே சேருவீர் சிங்களப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஓசிகள் ஆயிரம்!

தங்கையைத் தாரமாய்த் தழுவுஞ் சுகத்தை
தாயையும் குதறலாம் அங்கு கேட்பாரெவருமில்லை
கொள்ளைப் பொருள்கள் கொண்டூர் செல்ல
வள்ளங் கப்பல் வழங்கிடும் அரசே!

இன்றே சேருவீர் சிங்களப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஓசிகள் ஆயிரம்!

குரும்பர் வடையெனக் கூவும் பயிற்சி
இருந்தாற் போதும்! இதுவே தகைமை!
அஞ்சிக் கொழும்புறை அதுகளுஞ் சேரலாம்!
இறைச்சி மீன் கசிப்பும் இலவசம் தினம் தினம்!
அறுக்கலாம் தாலிகள் ஆயிரம் ஆயிரம்!
மொத்தச் சம்பளம் முறையாய்க் கணக்கிடின்
பத்தாயிரம் வரும்! பறந்துவா படைக்கு!
சவச்சடங் குனக்குத் தமிழனே செய்வான்!
சவச்செல வுன்தாய் தந்தைக்கும் ஈயோம்!

இன்றே சேருவீர் சிங்களப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஓசிகள் ஆயிரம்!

காலைக் கையை இழக்கினுங் கடவுள்
வாலையுஞ் சேர்த்து வழங்குவார் அடுத்து நீ
எடுக்கும் பிறப்பில்! எத்தனை லாபங்கள்!
கொடுப்போம் நட்டஈடு செத்தால்!
வழுக்கை விழுந்தால் மதகுரு வாகும்
வழக்கப்படி நீ பிக்குவும் ஆகலாம்!

இன்றே சேருவீர் சிங்களப் படையில்!
ஒன்றோ இரண்டோ ஓசிகள் ஆயிரம்!

*பண்டிதர் சா.வே.பஞ்சாட்சரம்*

# துயரத்திலே துடிக்கும் தமிழீழத்துக்கு அயர்லாந்து சொல்லும் வரலாறு...

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயர்லாந்தில் பல இயக்கங்கள் தோன்றின. பிரித்தானியாவுடன் பொருந்தி ஒன்றாக வாழலாம் என்று பேசும் ஐக்கிய வாதிகள்- சுயாட்சிக் கோரிக்கை அணியினர்- பிரிந்து வாழ்பதே வழியெனப் பேசும் குடியரசுவாதிகள் என மூன்று அணிகள் முறைத்து வளர்ந்தன.

போராட்டத்தின் கூர்மை பிரித்தானியாவை அச்சுறுத்தத் தொடங்கியவேளையில் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை அயர்லாந்துக்கு வழங்கலாமென 1880களின் நடுப்பகுதியில் அன்றைய லிபரல் அரசாங்கத்தின் ஒருபகுதியினர் குறிப்பிட்டனர்.

1885இல் இத்தகைய சட்டமூலம் ஒன்று பொதுமக்கள் சபைமுன் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டமூலம் பட்டபாடு, தமிழ் மக்களின் பேரால் சிறீலங்காவில் கொண்டுவரப்படும் சட்டமூலங்கள் பட்ட, படுகின்ற, படப்போகின்ற பாட்டுக்குச் சற்றும் சளைத்ததல்ல. பிரிந்து பேசிப் பேசியே முதுகிற் குத்த முயலும் அரசியற் சாணக்கியத்தின் அவதாரமாகவே இந்தச் சட்டமூலமும் விளங்கியது.

சுயாட்சிச் சட்டமூலம் பொதுமக்கள் சபையால் மறுக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்குகளினாலே தோற்கடிக்கப்பட்டது. 'இதை நிறைவேற்றியே தீருவேன்' என வீரமுழக்கமிட்டார் லிபரல் அரசாங்கப் பிரதமர். 1893இல் பொதுமக்கள் சபையில் 'சட்ட மூலம்' நிறைவேற்றப்பட்டது. ஆனால், பிரபுக்கள் சபை அதை மறுத்துப் புறந்தள்ளியது. அடுத்துவந்த 'பழமைவாத அரசு' நெய்யொழுகப் பேசி, நெய்போலவே வழுக்கி, சுயாட்சிக் கொள்கையின் முனை முறிக்கும் வேலையிலே திறமையாகச் செயற்பட்டது. பேச்சுக்கள், முறிவுகள், ஒப்பந்தங்கள் கிழிவுகள், சட்ட வரைபுகள், ஏமாற்றுக்கள் என்று 1948இற்குப் பின்னர் சிங்களப் பேரினவாதத்தாற் செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற ஏமாற்று வேலைகளை எப்படித் தமிழர்கள் படித்தார்களோ அயர்லாந்தினரும் அப்படியே படித்தார்கள் தமிழ் அரசியல்வாதிகள் எப்படி ஏமாந்தனரோ அவ்வகையிலேயே அயர்லாந்து அரசியல்வாதிகளும் ஏமாந்தனர்.

பேச்சுவார்த்தைகளால் இனிப்பயனில்லையெனப் புரிந்துகொண்ட அயர்லாந்து இளைஞர் அரசியலிலே தீவிரங்காட்டத் தொடங்கினர். ஏமாந்தவர் முதுகிலே எப்போதும் சவாரிவிடத் தயங்காத பிரித்தானியா, எழுந்து குமுறுகின்ற விடுதலைச் சூறாவளியைத் தணிக்கும் முயற்சியில், 'சில உரிமைகளை வழங்கும்' சீர்திருத்தங்களைச் செய்ய முன்வந்தனர்.

பெரும்வரையறைகளுடன் 1914இல் சுயாட்சிச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டது. சுயாட்சிவாதிகள் முழுநிறைவோடு தலையசைத்தாலும் குடியரசுவாதிகள் போர்க்கொடி தூக்கினர். முற்றுமுழுதான குடியரசு ஒன்றே அயர்லாந்தை மீள்விக்கும் என முழங்கத் தொடங்க, சுயாட்சிவாதிகளுக்கும் குடியாட்சி வாதிகளுக்குமிடையே முரண்பாடு பெருகத் தொடங்கியது. இரண்டு அணியினருக்கும் சமரசம் செய்ய இடையில் நுழைந்தவர் பூனைகளுக்கு அப்பம் பகிர்ந்து கொடுத்த குரங்காகினர். குடியரசை நேசிக்கும் சில தீவிர இயக்கங்கள் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டாலும் அது மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டது. கிளர்ச்சியாளர் 15 பேர் சாவொறுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தச் சாவுகள் குடியரசு அணியினரின் வலுவைப் பெரிதும் பெருக்கியது.

1918இல் அயர்லாந்தில் பொதுமக்கள் சபைக்கான தேர்தலில் இந்தவலு 'பளிச் சென' வெளிப்பட்டது. மொத்தமாகவிருந்த 105 இடங்களில் 73ஐக் குடியரசு அணியினர் பெற்றுக்கொண்டனர். ஐக்கிய அணியினர் 26 இடங்களைக் கைப்பற்றச் சுயாட்சி அணியினருக்கு 6 இடங்கள் மட்டுமே கிடைத்தன. தேர்தலில் வெற்றிபெற்றால் பிரித்தானியாவின் பொதுமக்கள் சபையைப் புறக்கணிப் போமென வாக்குறுதி அளித்திருந்த குடியரசு அணியினர் தமது வாக்குறுதிப்படி 'அயர்லாந்துக் குடியரசை' அறிவிக்கை செய்து தமது குடியரசுத் தலைவராக இமென் டிவலராவைத் தேர்ந்தெடுத்தனர். இதன் விளைவாக 1918 முதல் 21 வரை 'ஆங்கிலோ ஐரிஸ்' யுத்தம் நிகழ்ந்தது.

15 பேர் முதல் 25 பேர்வரையான குழு குழுவாகப் பிரிந்து குடியரசுப் போராளிகள் போர் புரிந்தனர். கரந்திருந்து தாக்குதல், பிரித்தானிய அரசின் முதன்மை மையங்களைத் தகர்த்தல், தொடர்புகளை அறுத்தல், உணவு வழிகளை அடைத்தல் என இலக்கு வைத்த தாக்குதல்கள் விரிந்து கொண்டன. 'கெரில்லா' என்ற பெயர் கேட்டாலே அரசு படைகளுக்கு ஈரல் நடுங்குமளவுக்கு மறைநிலை அதிரடித் தாக்குதல்கள் அரச படைகளை அழிக்கத் தொடங்கின. போராட்டத்தைக் கைவிட்டுப் பேசுவோம்' எனக் குடியரசு வாதிகளும் அழைப்பை ஏற்றுக்கொண்டனர்.

ஆதர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ், இமென் டிவலரா ஆகிய தலைவர்கள் பேச்சுவார்த்தையிற் கலந்துகொண்டனர். மதத்தைக் காரணங்காட்டி அயர்லாந்துக்கான முழுவிடுதலையைப் பிரித்தானியா மறுத்தது. Irish Free State என்னும் திட்டத்தையும் முன்வைத்தது. இதன்படி

1) வட அயர்லாந்து பிரித்தானியாவுடன் இணைந்த மாகாணமாகத் தொடர்ந்தும் இருக்கும்.

2) தென் அயர்லாந்துக்குப் பிரித்தானிய முடியின் கீழான சுதந்திரம் வழங்கப்படும். இது கனடாவுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும், 1948இல் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும் ஒத்ததாகும்.

புரட்டஸ்தாந்து மதத்தைப் பேணுபவர்கள் என்ற காரணத்துக்காக வட அயர்லாந்தின் சுதந்திரம் மறுக்கப்படுவதையும், முற்றுமுழுதானதற்ற சுதந்திரமே தென் அயர்லாந்துக்குக் கிடைப்பதையும் இமென் டிவலரா உட்படப் பல குடியரசு அணியினர் எதிர்த்தனர் எனினும் குடியரசு அணியின் பெரும்பான்மை இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டதால் 1921இல் இவ்வுடன்படிக்கையில் ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ் ஆகியோர் கையொப்பமிட இவர்கள் தலைமையில் 1922இல் Irish Free State என்ற பெயரில் தென் அயர்லாந்து அரசு உயிர்த்தது.

இத்துடன் அயர்லாந்தின் போராட்டம் முடிந்ததா?

1922இல் Irish Free State என்ற பெயரில் தென் அயர்லாந்து அரசு உயிர்த்தபோதும் வட அயர்லாந்து பிரித்தானியாவுடன் இணைக்கப்பட்டது. அயர்லாந்து வடக்கு, கிழக்கு என இரண்டு பிரிவுகளாகத் துண்டிக்கப்பட்டதை எதிர்த்து இமென் டிவலரா உள்ளிட்ட குடியரசுவாதிகளின் ஒரு பிரிவினர் போராடத் தொடங்கினர்.

ஐரிஷ் குடியரசுப் படையின் ஒரு பிரிவினர் (IRA) புதிய தென் அயர்லாந்து அரசின் படையாக மாற்றம்பெற மறு பிரிவினர் படைக்கலம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல, பிரித்தானியா தனது பிரித்தாளும் சூழ்ச்சியில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகண்டது. ஒரு தாயக விடியலைக் கருத்திற்கொண்டு உருவான ஐரிஷ் படை ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்துக்கொண்ட இந்த உள்நாட்டுப் போர் 1922 முதல் 23 வரை நடந்தது. இப்போரைத்தான் வரலாற்று வல்லுனர்கள் அயர்லாந்தின் உள்நாட்டுப்போர் என அழைக்கின்றனர்.

தென் அயர்லாந்து அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ் ஆகிய பெருந்தலைவர்களில், ஆர்தர் கிரிபித், 1922 செப்ரெம்பர் முதல் வாரத்தில் இயற்கைச் சாவடைந்தார். மைக்கல் கொலின்ஸ் அதே மாதப் பிற்பகுதியில் அரசபடைப் பாசறையைப் பார்வையிடச் சென்றபோது குண்டுத்தாக்குதலாற் கொல்லப்பட்டார். எனினும், இந்த உள்நாட்டுப் போரில் தென் அயர்லாந்தின் அரச படைகள் வெற்றியைக் கண்டன. மறுபிரிவினர் தோல்வியுற்றாலும் தங்கள் இலக்கைக் கைவிடவில்லை.

1932ஆம் ஆண்டு இமென் டிவலரா தென் அயர்லாந்தின் தலைமை அமைச்சரானபோது ஒரு பெரிய திருப்பம் நிகழ்ந்தது. பிரித்தானிய முடிக்கு விசுவாச அறிக்கை செய்தல் என்னும்முறை முற்றாக நீக்கப்பட்டது. 1938இல் பிரித்தானியப் படைத்தளங்கள் அகற்றப்பட்டதும் தேசாதிபதிக்குப் பதிலாக அயர்லாந்துக்குப் பொறுப்பான 'அதிபர்' என மாற்றம் கொண்டுவரப்பட்டது. Irish Free State என்பது அயர்லாந்து எனப் பெயர் இறுதியாக மாற்றம் செய்யப்பட்டது. 1948ஆம் ஆண்டில் பிரித்தானிய உறவை முற்றாகத் துடைத்தெறிந்து அயர்லாந்துக் குடியரசு தோன்றியது. 1932ஆம் ஆண்டில் தலைமை அமைச்சரான இமென் டிவலரா, 1948 வரை தொடர்ந்து தனது பதவியிலிருந்து 'அயர்லாந்துக் குடியரசை' ஆக்கினார்.

இமென் டிவலரா 1932ஆம் ஆண்டில் தலைமையமைச்சரானபோது வட, தென் அயர்லாந்துப் பிரிவினையை எதிர்த்துக்கிளர்ச்சி செய்த IRA பிரிவினர் இவருக்கு எதிராகவும் தமது செயற்பாடுகளைச் செய்யத் தவறவில்லை. இமென் டிவலராவும் இவர்களை ஒடுக்கும் செயற்பாடுகளைச் செய்யவேண்டியே இருந்தது. எனினும் 1948இல் குடியரசு தோற்றம் பெற்றதோடு எதிர்ப்பாளர்கள் அயர்லாந்துக் குடியரசுக்கெதிரான தமது செயற்பாடுகளை நிறுத்திவிட்டு வட, தென் அயர்லாந்தின் இணைப்பிற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கத் தொடங்கினர், முன்னெடுத்தும் வருகின்றனர்.

அயர்லாந்தின் ஒருபகுதி விடுதலை பெற்ற குடியரசு ஆகிவிட்டபோதும், இன்னொரு பகுதி இன்னமும் பிரித்தானிய முடியின் கீழேதான் இருக்கின்றது. அதனை விடுவிக்கத் துடிக்கும் போராளிகளின் துப்பாக்கிகள் இன்னமும் நெருப்பைக் கக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

## கருகிப்போன கதிரவனா நீ?

*நினைவுகளைப்*
*படம்பிடித்தான்*
*ஒருவன்*
*மேற்குலகம் அவனைச்*
*சாமியாராக்கவில்லை*
*பிரபஞ்சக் காந்தத் துகளின்*
*புரிபடாத விந்தையென்று*
*காரணந் தேடிக்*
*கண்விழிக்கிறது!*

*கண் வீச்சினால்*
*இரும்பைக் காகிதச் சுருளாக்கினான்*
*ஒருவன்*
*கடவுள் வந்தாரென்று*
*காலிலே விழவில்லை அறிவு*
*இரும்பை உருக்கும்*
*நெருப்பின் நாக்கு*
*விழிக்குள் வந்தது*
*எப்படியென்று நோற்றலின் ஆற்றல்*
*தேடுகிறது...!*

*வயிற்றுக் கட்டியை*
*விரலால் வயிறுகீறிச்*
*சிகிச்சை செய்தான்*
*ஒருவன்!*
*சிறைக்கதவு தன்–*
*கம்பிகளை எண்ணச்சொன்னது!*
*ஒருநாள்*
*தெருவீதியில் மோதுண்டு*
*செத்துப்போனான்...*

*அறிவியல் விந்தைகளை*
*மேற்குலகம்*
*அறிந்து அறிவிக்கும் போது–*
*தமிழா தமிழா..*
*நீ என்ன செய்கிறாய்?*
*தண்ணீரிலே கைவிட்டு ஒருவன்*
*தவளையைக் காட்டினால்*
*தாடிக்குக் கூட*
*தூப தீபங்கள்*

*வெற்றிலை மையிலே*
*'விதி' தெரிகிறது என்றால்*
*கோழி கொடுத்துவிட்டுக்*
*கொட்டாவிகள்–*
*கையைச் சுழற்றிக்*
*காற்றைக் கடைகிறாய்*

*அதிசயங்களை*
*ஆளுவதே வெற்றி*
*ஆட்படுவது அவலம்*
*சக்தியின் பரவல்*
*செக்கா விளைவு*
*சாக்குருவிப் புலம்பல்*
*நீர்த்து விளைவு*
*நீயென்ன*
*செத்துப்போன சூரியனா?*
*ஆளுவோம் எதனையும்*
*எப்போதும் எப்போதும்*
*எழுந்து நில்!*
*மனத்தை நீ உழுதால்*
*எழுவாய்*
*தொழுதால் கெடுவாய்....*

*மூசும் சூரியனின்*
*முடிநெருப்பு நானென்று*
*நினைத்தபடி கைவீசு!*
*சுழலும் வட்டங்கள்*
*கைக்குள்ளே*
*சின்னப்பந்தாகும்.*

*மனத்தினால்*
*வானைத் தொடு*
*தாரகைப் பூக்களை*
*நீ தடவலாம்!*
*விழிநெருப்பைக்*
*குவித்துப்பார்*
*உன் அழுக்கு, அவலம்*
*அடிமை தொலையும்*

*உலகத்தின்*
*உயர்ந்த அதிசயமாக*
*உன்னையும்*
*தமிழ் ஈழத்தையும்*
*உருவாக்க எழுவோம்*
*வா!*

# கரும்புலி மேஜர் ஆதித்தன்

நிதானித்துக் கொள்வதற்கிடையில் அந்த நிகழ்வு அவர்களை நிலைகுலையச் செய்துவிட்டது. கைகளால் தொடுகின்ற தூரத்திற்குள் கடுமையான துப்பாக்கிச் சூடுகள், எதிர்பார்த்ததுதான், என்றாலும் இவ்வளவு சீக்கிரத்தில் நடக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. இராணுவ முகாம்நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது முகாமிற்கு அருகில் பதுங்கியிருந்த இராணுவம்தான் தாக்குதலை ஆரம்பித்தது. அந்தத் தாக்குதல், இமைப்பொழுதில் அவனோடு கூடவந்தவர் களைப் பிரித்துவிட அவன் தனித்தவனானான்.

எங்கும் கடும் இருட்டு. இருளுக்குள் இருந்து பெரிய உருவம் ஒன்று பாய்ந்து அவனைக் கட்டிப் பிடித்தது. அவனைவிட பெரிய உருவம் அது இரண்டு கைகளாலும் அவனை நசுக்கிவிடுவது போல் அழுத்திப்பிடித்தது. மின்னல் வேகத்தாக்குதல், என்றாலும் நிதானித்துக் கொண்டான். பறிக்க முயற்சித்தான். முடியவில்லை, மூச்சுத்திணறியது. அவனைப் பிடித்திருப்பது இராணுவ வீரன். அவன் பெரும் குரல் கொண்டு உதவிக்கு ஆட்களை அழைத்தான்.

"சிறீல்ல்ல்... சிறீல்ல்ல்..." நிலமை மோசமாவது தெரிந்தது. புயல் வேகத்தில் தனது காலால் அந்த ஆமிக்காரனின் காலைப் பலமாய் உதைத்தான். சிறிய தளர்வு அதைச் சாதகமாக்கி கைகளின் பிடிக்குள் இருந்து விலகிக்கொண்டான். அவன் வைத்திருந்த ஆயுதம் 203 (டொங்கான்) குறுகிய தூரத்திற்குள் சுடமுடியாது. எட்ட நின்று சுடுவதற்கு நேர அவகாசமில்லை. எதிரி நிதானிகக முன் தனது ஆயுதத்தால் ஓங்கி ஓர் அடிபோட்டான்.

எதிரி சற்று நிதானம் இழந்து நின்றான். மீண்டும் முகத்தில் பலமான அடி. கடைசியாய் தனது பலம் முழுவதையும் கையில் திரட்டி கன்னத்தில் போட்டான் ஒருபோடு அதற்குப் பின் ஆமிக்காரன் நிமிர்ந்து நிற்கவேயில்லை.

"அம்மே" என்று அடிவயித்தில் அலறியபடி தொப் பென்று நிலத்தில் விழுந்தான். அவனுக்கு முகமெல்லாம் வியர்த்து உடல் தெப்பமாய் நனைந்துவிட்டது. நின்று பார்க்கவேயில்லை. கத்திய சத்தம் கேட்ட திசைக்கு இராணுவம் தேடிவரும் சப்பாத்துச் சத்தங்கள் கேட்டது. கீழே விழுந்துவிட்ட 'ஷெல்' லினை எடுத்துக்கொண்டு மறைவான இடத்துக்கு ஓடினான். நேரங்கழித்து அந்த இடமெல்லாம் இராணுவ நடமாட்டங்கள் அடங்கிப் போனது. அவன் தனித்த ஒருவனாக நின்றாலும் தோழர்களின் நினைவு நெஞ்சைக் கனமாக்கியது.

'காயப்பட்டு விழ்ந்து கிடப்பார்களோ இல்லை வீரச்சாவடைந்திருப்பார்களோ' தனக்குள் எண்ணியபடி அவன் அந்த இடமெங்கும் தேடத் தொங்கினான். சுற்றுப் புறமெங்கும் தேடினான். ஒவ்வொரு பற்றை மறைவுகளை யும் தேடினான் எங்குமே காணவில்லை. காலை விடியப் போகின்றது என்பதால் முகாமில் இருந்து சற்றுத் தள்ளிவந்து நிலையெடுத்தான்.

விடிந்த பின்புதான் தோழர்களோடு சேர்ந்து கொண் டான். எவருக்குமே ஒருவித இழப்புக்களும் இல்லை.

காலையில் அவனைக் கண்டதும் போராளிகள் ஆச் சரியப்பட்டுக்கொண்டார்கள். அவனின் ஆயுதத்தில் சின் னத் தசைத்துண்டு ஒன்று ஒட்டிக்கொண்டிருந்தது. எவருக் கும் அது புரியவில்லை. புருவங்களை உயர்த்தினார்கள். ஆனால் அவனுக்குத் தெரியும். அவன் சிரித்தான்.

'இதுதான் இராத்திரி என்னை உயிரோடுபிடிக்க வந்தவன்ர கன்னம்' இதற்குப்பின்தான் எல்லோரும் சிரித் தார்கள். அவர்களின் விழி அவனின் வீரத்தைப் பாராட்டியது.

ஆதித்தன்... அவனுடைய வீட்டு வாழ்க்கை, சோகங் களை தனக்குச் சொந்தங்களாக்கிக்கொண்ட பயணம். அவன் தன்ர வாழ்க்கையைச் சொல்ல ஆரம்பித்தால் வார்த்தைகளே ஈரமாகும்.

அவனது உறவின் விட்டம் மிகச்சிறிது. எலும்பும் தோலுமாய்ப் போனாலும் உடலிலிருந்து பிரியத்துடிக் கின்ற உயிரைப் பிள்ளைகளின் வாழ்க்கைக்காக இழுத்து வைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் அவனின் அம்மா. தனக்கென ஒரு குடும்பத்தை உருவாக்கி வீட்டில் இருந்து பிரிந்துபோன மூத்தஅண்ணன் ஒருவன் அதைவிட அவனுக்கு சின்ன அண்ணன் என்றொரு உறவு அவ்வளவுதான். சின்ன வயதிலேயே அப்பாவை மரணத்திற்குப் பறிகொடுத்துவிட்டான். எஸ்ரேட் வாழ்க்கை. அம்மாவின் இயந்திரத்தனமான உழைப்பு இவையெல்லாம் சின்ன வயதிலிருந்து அவனுக்கு மனக்காயங்களை ஏற்படுத்திய விடயங்கள், காலையில் பனிப்புகார் காலை முதல் எழுந்து, பள்ளிக்கூடம் போகின்ற பிள்ளைகளுக்காக ரொட்டி சுட்டு வைத்துவிட்டு அழைப்பு விசில் ஊத அவசரம் அவசரமாக கூடையைத் தூக்கிக்கொண்டு தோட்டம் போகின்ற அம்மா சாயந்தரம்தான் வீடு வருவாள். வீட்டை வருகின்ற நேரம் அட்டைகடித்து காலெல்லாம் இரத்தம் கசிந்து கொண் டிருக்கும். ஆனாலும் அம்மா சொல்லுவாள். "நீங்கள் வளர்ந்து பெரிய மனுசன்களாய் எங்கயாச்சும் நல்லா இருக்கனும்" அதுக்காகத்தானே இவள் இவ்வளவு கஸ்ரங்களையும் அனுபவித்து அந்த வாழ்க்கையைச் சுமந்துகொண்டிருக்கிறாள். அன்றொருநாள் காலையில் அழைப்பு விசில் முதல்முறை ஊதி இரண்டாம்முறை ஊதிய பின்பும் அம்மா பாயைவிட்டு எழுந்திருக் கவில்லை. அன்று அவளை நோய் பாயிலேயே சிறை வைத்தது. அன்றிலிருந்து அவள் எழுந்து நடமாடக்கூட முடியாதவளாகிவிட்டாள்.

'சின்னண்ணாடேய் அம்மாவுக்கு வருத்தமடா மருந் தெடுக்கிறதெண்டா ஆயிரம் ரூபா தேவை' சின்ன வயதிலேயே அம்மாவை மரணத்திடம் பறிகொடுத்து விடாது காப்பாறி விட வேண்டும் என்ற துடிப்பு அவனுக் குள் ஊறிக்கொண்டது. அம்மாவைக் காப்பாற்றுவது என்றால் பணம் தேவை. பணத்திற்கு என்ன செய்வது! இரண்டு பேருக்கும் வழிதெரியவில்லை. அவர்களுக்குத் தெரிந்தது ஒரே வழிதான். படிப்பை நிறுத்தி எங்கையாவது வேலையில் சேர்ந்து கொள்வது. அண்ணன் எங்கோபோய் ஒரு வேலையில் சேர்ந்து கொண்டான். இவனையும் இவனது உறவுக்காரர் கொழும்பில் ஒரு பலசரக்குக் கடையில் சேர்த்துவிட்டார்.

பள்ளிவயதிலேயே அம்மாவைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகக் கடையிலேயே வேலையைத் தொடங் கினான். முதலில் கடையில் வேலை செய்பவர்களுக்கு தேனீர், சாப்பாடு வேண்டிக்கொடுக்கின்ற வேலை. பின் சரை கட்டுவது, பொருட்கள் நிறுப்பது, கொள்வனவுப் பொதிகள் எடுத்து வருவது, அதற்குப்பின் கணக் கெழுதுவது, வங்கியில் காசோலை வைப்புச் செய்வது என்ற திறமையின் அடிப்படையில் முன்னேறி வந்தான். கொழும்பில் கடையில் நின்றபோது, பதுளையின் வாழ்க் கையை சற்று நினையாது இருந்தாலும் விடுமுறையில் அம்மாவைப் பார்க்க வருகின்றபோது நினைவுகள் சூடாகும்.

1983ம் ஆண்டு இனக்கலவரம் நடந்தவேளை இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு அம்மா ஓடிவந்து ஒளிஞ்சிருந்த சின்ன மரவள்ளித்தோட்டம் இதுதான். அதற்குள் அம்மா அழுத அழுகை இப்போதும் காதுகளில் பிசுபிசுத்தது. 'என்ர உயிர் போனாலும் பரவாயில்லை நீங்கள் எங்காச்சும் ஓடித்தப்புங்கோ' இந்த இடத்தில் வைத் துத்தான் அவனின் கண்முன்னால் அப்பாவை அடித்து றக்கில இழுத்து ஏத்திக்கொண்டு போனவங்கள். இப்படி ஒவ்வொரு இடமும் அவனுக்குள் இனம்புரியாத கொதிப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் அவனுக்கு வழிகள் எதுவும் புரியவில்லை. அதெல்லாம் அவனுக்குள்ளேயே அடங்கிப் போனது. கடைசியில் மொத்தமாக பொருட்கொள்வனவு நடக்கின்ற நாட்களில் இரவு பகல் என்று பாராமல் வேலை நடக்கும். அல்லது நேரத்தோடயே கடைக்கதவு சாத்தப்படும். அன்றும் நேரத்துடன் வேலைகளெல்லாம் முடிந்துவிட்டது. எல்லோரும் கூடியிருந்து வானொலி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அது ஓர் எதிர்பாராத நிகழ்வு.

வானொலியில் பி.பி.சி ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் ஒலிபரப்புச் சேவை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வானொலியை யாரும் கேட்பதாக இல்லை வேலை அசதி தீருவதற்காக எல்லோரும் சிரித்துக் கதைத் துக்கொண்டிருந்தார்கள். திடீரென்டு அவனின் குரல் அவர்களிடமிருந்து பிரிந்து மௌனமாகிக் கொண்டது.



கரும்புலி மேஜர் ஆதித்தன்
முனியாண்டி சுதாகரன்
பதுளை மாவட்டம்
வீரமலர்வு : 28.08.1978
வீரஉதிர்வு : 25.12.1999

**வீரப்போரிற்கு தோள் கொடுத்த களங்கள்**

- 27.03.1997இல் புல்மோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித் தாக்குதல்.
- 5.11.1997இல் மொறவேவா பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல்.
- 9.08.1997இல் குச்சவெளிப்பகுதியில் இராணுவ ரோந்து அணி மீதான தாக்குதல்.
- 11.10.1997இல் மன்னார். முருங்கன். இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்.
- 22.12.1997இல் பரந்தனிற்கும் கரடிப்போக்குச் சந்திபிற்கும் இடையில் இராணுவ அணிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார்த் தாக்குதல்.
- 09.01.1997இல் ஆனையிறவு. பரந்தன் இராணுவ தளங்கள் மீதான அழித்தொழிப்புத் தாக்குதல்.
- 1997–1998இல் கரும்புலிகள் அணியிற்கு வரும்வரை ஜயசிக்குறுய் எதிர்ச்சமரில் 82MM மோட்டாரணைகத் தாக்குதலில் ஈடுபட்டது.
- கரும்புலிகள் அணியில் இணைந்த பின் ஓயாத அலைகள் –3இல்
- மணலாற்றுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட றெய்டு நடவடிக்கை
- யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட றெய்டு நடவடிக்கை.

வானொலி நிகழ்ச்சி அவனது செவிகளை ஈர்த்துக் கொண்டது.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனை செய்தியாளர் ஆனந்தி அவர்கள் செவ்வி கண்டது ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அந்தத் தலைவன் உச்சரித்த ஒவ்வொரு வரிகளையும் கேட்டுக் கேட்டு பிரமித்துப் போனான். அன்றுதான் அவனுக்கு தமிழர் களுக்கென்றோர் தலைவன் இருப்பதும், இப்படிப் பெரிய ளவில் போராட்டம் நடப்பதும் தெரியவந்தது. அவனின் நெஞ்சுக்குள் நம்பிக்கைப் புயலொன்று மையங்கொள்ளத் தொடங்கியது. தலைவரின் பேட்டியைக் கேட்டதிலிருந்து தனது பயணத்தின் ஒரு விடிவெள்ளியைக் கண்டுவிட்ட திருப்தி அவனுக்கு. முகம் தெரியாத அந்தத் தலைவன் மீது அளவுகடந்த நம்பிக்கையும், பாசமும் வைத்தான். மௌனமாய் அவனது மனதுக்குள் எத்தனையோ கோடி யாண்டின் மழைவெள்ளம் ஒன்றுசேர்ந்து கரைபுரண்டது. போராட்ட ஆதரவாளர்களை அவன் கண்டுகொள்கின்ற போதெல்லாம் போராட்டம் பற்றியும், போராட்டத்தில் எவ்வாறு இணைந்துகொள்வது பற்றியும் கேட்டு அறிந்துவைக்கத் தொடங்கினான்.

1992ம் ஆண்டு அறிந்த தலைவனை 1994ம் ஆண்டு வரை யாருக்கும் தெரியாது நெஞ்சுக்குள் பூட்டிவைத்து நேசித்தான். 1994ம் ஆண்டு இயக்கத்தில் இணைந்து கொள்வது என்ற முடிவோடு கொழும்பிலிருந்து புறப்படத் தயாரானான். பதுளைக்குச் சென்று அம்மாவைப் பார்த்தான். 'கொழும்பில் அடிக்கடி பிடிக்கிறாங்கள்.... தெரிஞ்சவை யாழ்ப்பாணம் போகினம் அவையோட போய் இருக்கப்போறன்' என்றான் மகன் தன்னைவிட்டு நீண்டதூரம் போகிறானே என்ற ஏக்கம் அவள் கண்களை பெருக்கெடுக்க வைத்தது. 'எங்கையெண்டாலும் நல்லா யிருந்தாச் சரி' அந்த விடைகொடுப்பிற்குப் பின் என்றுமே அவன் அம்மாவைப் பார்த்ததில்லை. அவன் நினைத்து வந்தது போலவே யாழ்ப்பாணம் வந்ததும் இயக்கத்தில் இணைந்து கொண்டான். தலைநகர் படையணிதான் அவனை உள்வாங்கிக் கொண்டது. தலைநகர் சென்று அங்கே பல சண்டைகளிலும் பங்கெடுத்தான். பின்


**துளசிச்செல்வன்**

# கணப்பொழுது

வன்னிக்கு வந்து 'ஜயசிக்குறு' நடவடிக்கை எதிர்ச் சமரிலும் களம் இறங்கினான். ஆனாலும், அவனது மனம் திருப்திப்படவில்லை. இந்த தேசவிடுதலைக்காக அதி உயர்வான பங்களிப்பைச் செய்யவேண்டுமென்ற உணர்வில் தலைவருக்கு கடிதம் வரைந்தான். 'நான் கரும்புலியாய் போவதற்கு அனுமதி தாருங்கள்' கடிதம் வரைந்துவிட்டு காத்திருந்தான். பதில் கடிதம் வருவதற்கு முன் வீட்டிலிருந்து கடிதம் வந்திருந்தது. அம்மா அழுதழுது காகிதத்தை நனைத்திருந்தாள். 'பக்கத்து ஊட்டுக்காரங்க மக எங்க, மக எங்க எண்டு கேட்டு ஒரே தொல்லையாய் இருக்கு. ஒன பார்த்து கனநாளாய்ப் போச்சு ஒருக்கா வந்திட்டுப்போ மக' அம்மாவின் கடிதம் வந்த அதேதினம்தான் தலைவரிடமிருந்தும் பதில்க்கடிதம் வந்திருந்தது.

அன்றைய நாள் அவனுடைய வாழ்க்கையில் சந்திர கிரகணம் அம்மா.... போராட்டம்.... அவன் எடுத்துக் கொண்ட வாழ்க்கை? அம்மாவின் கடிதத்தை மனசோடு வைத்துவிட்டு அவன் தனது பணிகளை தொடர்ந்தான். கரும்புலிகள் அணியில் இணைந்துகொண்டு இலக்கு கிடைக்கும் வரை காத்திருந்தான். அவன் கரும்புலிகள் அணியில் இணைந்து கொள்வதற்கு முதலே எந்த நிமிசத்திலும் போராட்டத்திற்காகத் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக்கொள்ள துணிந்தவனாகயிருந்தான். அப்படியான நாளொன்றில் மாங்குளப்பகுதியில் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை மறித்துப்போடப்பட்ட பாதுகாப்பு அரணில் நின்றிருந்தான். அன்று காலை விடியுமுன்னே காடு கண்விழித்துக்கொண்டது. விடிகின்ற ஓசையே வெடிச்சத்தமாய்த்தானிருந்தது. முன்பக்கம் 'டாங்கி'களின் இரைச்சல், பின்பக்கம் துப்பாக்கிகளின் சடசடப்பு, சுற்றிலுமே குண்டுவெடிப்பின் அதிர்வுகள் எல்லா வழிகளிலும் அடைக்கப்பட்ட ஒரு முற்றுகைக்குள் அவர்கள் முடக்கப்பட்டிருப்பது விடிந்தபின்புதான் தெரிய வந்தது. ஆனால் அது இரவே நடந்தேறிவிட்டது. இப்போது எல்லா முனைகளிலும் வெடிஅதிர்வுகள் அவனின் நிலையை நெருங்கி வருவது தெரிந்தது. அவனின் பொறுப்பின் கீழ் இருந்த ஒரு 82 மி. மீ மோட்டரும் ஏழு போராளிகளும், இறுக்கமான அந்த முற்றுகையை உடைத்து வெளியே வரமுடியாது என்று தெட்டத்தெளிவாக தெரிந்த பின்னும், அவன் பதட்டம் அடையவில்லை. 'இருக்கிற செல் முழுவதையும் அடிப்பம்' என்று கூறி நின்ற போராளிகளை திடப்படுத்தி வைத்திருந்தான். இறுதிவரையும் எதிரிக்கு இழப்பு ஏற்படுத்துவதிலேயே அவன் குறியாக இருந்தான்.

300மீ.... 275மீ.... 250மீ.... 225மீ எதிரிக்கேற்ப தூரவீச்சு மிக வேகமாகக் குறைந்துகொண்டுபோகப் போக அவர்களின் முற்றுகை இறுகுவது தெரிந்தது. முன்புறம் நான்கு 'ராங்கி'கள் நெருக்கமாக வந்துவிட்டது என்பதை அவற்றின் ஓசைகளில் இருந்து பிரித்து அறியக் கூடியதாக இருந்தது. வைத்திருந்த செல்களெல்லாம் அடித்து முடிக்கின்ற நிலை வந்தபோது, "இரண்டு செல்லை எடுத்துவை ஆமிக்காரன் கிட்ட வந்தா வெடிக்க வைச்சு மோட்டாரையும் எங்களையும் அழிப்பம்." எதுவித கலக்கமும் இல்லாது கூறிவிட்டு பின்வாங்குவதற்காக மரத்திலே கட்டியிருந்த குறோசை ஏறி அவிழ்த்தான். ஆயுதங்களை மட்டும் எடுத்துக் கொண்டு பின்வாங்கக் கூடியமாதிரி இருங்கோ என்று கூறிவிட்டு வெளியில் நிலைமையைக் கவனித்தான். இராணுவம் மிகவும் நெருக்கமாக வந்துவிட்டது. ஒவ்வொரு இராணுவ வீரனையுமே கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. இராணுவத்தின் செறிவு எங்கு குறைவாக உள்ளதோ அந்தப் பகுதியைக் கவனித்து அந்தப்பகுதியூடாக, இருந்த



துப்பாக்கிகளை வைத்துத் தாக்குதலை நடத்திப் பின்வாங்கினான். அவனுடன் நின்றவர்களுக்கோ அல்லது ஆயுதத்திற்கோ சேதம் இல்லை என்றாலும் பெரும் சிரமத்தின் பின்தான் எமது தற்காலிக நிலையை வந்தடைந்தனர். அற்குப்பின்தான் அவன் கரும்புலியாய் இணைந்து கொண்டான்.

கரும்புலியாய் இணைந்து அவனுக்கு முதலில் கிடைத்த இலக்கு மணலாற்றுப் பகுதியில் இருந்தது. அந்த இலக்கை அழிக்க பயிற்சி எடுத்து ஓய்வாக தேனீரோ உலருணவோ உண்ணுகின்ற வேளை இப்படித்தான் சொல்லுவான். நான் காயப்பட்டாலும் நினைவு இழக்கிறவரை தவண்டு தவண்டெண்டாலும் என்ர பணியை நிறைவேற்றுவேன்.

அந்தத் தாக்குதலுக்கு அவன் இயந்திரத் துப்பாக்கிதான் கொண்டு போகவிருந்தான்.

"இதுதான் அண்ணை எதிர்பார்க்கிறதைச் செய்து முடிக்கப் போறது" என்று அன்பாக தூசி துடைத்து மூடி வைப்பான் தனது ஆயுதத்தை. ஆனால் அந்த இலக்குத் திட்டத்தின்படி தாக்க வேண்டிய தேவை இல்லாமையினால் அவன் வேறு வேலைத்திட்டமாக அதே பிரதேசத்திற்குள் அனுப்பப்பட்டான். அதை நிறைவேற்ற வந்தவனிற்கு யாழ் மாவட்டத்திற்குள் ஓர் இலக்கு வந்தது. அதை அழிக்கச் சென்ற வேளைதான் இராணுவத்திடம் பிடிபட நேர்ந்தது. கையால் அடித்துவிட்டுத் தப்பி வந்திருந்தான். என்றாலும், அங்கே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகள் அனைத்தையுமே செய்து முடித்திருந்தான். அண்ணை நிறைய எதிர்பார்க்கிறார். அண்ணையின்ரை எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் எப்போதும் அவன் உதடுகள் உச்சரிக்கும்.

ஆனையிறவுக்குள் தாக்குதல் நடத்துவதற்காக அணிகள் பிரிக்கப்பட்டபோது காய்ச்சல் காரணமாக இவனை அந்த அணிகளுடன் சேர்த்துக் கொள்ளவில்லை. அந்த அணிகளோடு தானும் போகவேணும் என்று பாடுபட்டுக் கேட்டான். அவன் அந்தத் தாக்குதலுக்கு அனுமதிக்கப்படவில்லை. சரியான மனக்கவலையோடு காத்திருந்தான். அதுக்கான சந்தர்ப்பம் மிக விரைவிலேயே கிடைத்தது. வேறுமுனையொன்றில் தாக்குதல் தொடுக்க வேண்டியிருந்ததினால் அவசரமாக கரும்புலிகள் அணி தயார்ப்படுத்தப்பட்டபோது அந்த அணிகளோடு ஆதித்தனும் சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

அணிகள் புறப்படுவதற்குத் தயாராக நின்ற இறுதிக் கணம், சிரித்துச் சிரித்து கையசைத்து எல்லோருக்கும் விடைகொடுத்துக் கொண்டிருந்தான். போகின்ற நேரம் இதைத்தான் சொல்லிவிட்டுப் போனான். அண்ணை எங்களுக்கு போகச்சொல்லி விடை கொடுத்த நேரம், அண்ணையின்ரை முகம் வாடிப்போய் இருந்திச்சுது அதை நினைக்க இப்பவும் மனசுக்க வேதனையாக் கிடக்குது. மிகவிரைவிலேயே அண்ணையின்ரை காலத்திலேயே தமிழீழம் மலரும் அதைப்பார்த்து அண்ணை சிரிக்கேக்கைதான் என்ர மனம் ஆறுதலடையும். என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

போனவர்கள் என்ன செய்தி சொல்லுவார்கள் எனக் காத்திருந்தவர்களுக்கு வந்த செய்தியோ இதயங்களிற்குள் இடியைச் சொருகியது. வானம் தலையைத் தொட்டுவிட்டது போன்ற உணர்வு. ஓயாத அலைகள் மூன்றிற்கு இந்தத் தேசம் கொடுத்த பெருவிலைகளுள் ஒன்றாய் ஆதித்தனும் போய்விட்டான். என்றாலும் என்றைக்கும் அவன் நினைவினைச் சுமந்தபடியே இந்தத் தேசம் சுவாசித்துக் கொள்ளும். ■

# எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்



**எமது உழைப்பே எமது தேசத்தை உயர்த்திட வழிவகுக்கும்**

சிறீலங்காப் பேரினவாத அரசானது தமிழீழ தேசத்தின் மீது தனது ஆட்சி அதிகாரத்தையும் இராணுவ வல்லாதிக்கத்தையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தி எமது நாட்டின் பொருளாதார வளங்களையும் மக்களது உற்பத்திக்கான நடவடிக்கைகளையும் சீரழித்துக் கொண்டேயிருக்கின்றது.

இந்த அழிப்பின் உள்நோக்கம் தமிழீழத்தில் மேன்மையானதொரு பொருளாதார முயற்சிகள், நடவடிக்கைகள் இடம்பெறுவதையோ அன்றி அவைகள் வளர்ந்து செல்வதையோ சற்றேனும் மனதார விரும்பாத நிலையில், ஒருபுறம் தமிழீழத்தின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துக் கொண்டு இன்னொருபுறம் யுத்தத்தின் மூலம் தமிழீழத்தின் வளர்ச்சிகரமான நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முனைதலே இதற்கு உதாரணம். கடந்த காலங்களில் சிறீலங்காப்படைகளால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளான ஜெயசிக்குறு, ரிவிபல, ரணகோஸ தொட்டு சமீபகாலங்களில் யாழ் குடாநாட்டில் தென்மராட்சியை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் கினிகீர யுத்த நடவடிக்கைகளைக் கொள்ளலாம்.

நெல் அறுவடைக்காக தமிழீழ விவசாயிகள் காத்திருக்கும் சமயங்களில்தான் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இவற்றின் மூலம் பல்லாயிரக்கணக்கான விளைநிலங்களும் கால்நடைகளும் ஆக்கிரமிப்புப் பேய்களின் இரும்புக்கால்களில் நசிபட்டு அழிந்து போயின.

தமிழீழ மக்கள் கடும் வெய்யிலிலும், மழையிலும், பனியிலும் வியர்வை சிந்திப் பாடுபட்டு வளர்த்தெடுத்த பயிர்கள் வளம்மிக்க விளைநிலங்கள் திட்டமிட்டே அழிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக தமிழீழப் பொருண்மியத்தைச் சீர்குலைப்பதோடு தமிழீழ மக்களை மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட சிறீலங்கா அரசானது முனைகின்றது. இதன் நிமித்தம் சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பு அற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் ஒன்றுசேரும்போது அங்கே உணவுத் தட்டுப்பாட்டுடன் மேலும் பல இட நெருக்கடிப் பிரச்சனைகளும் தோற்றம் பெறுகின்றன.

இந்நிலையில் தமிழீழ மக்களாகிய நாம் சிதைந்துபோகும் நமது தேசத்தின் பொருளாதார வளங்களைக் கண்டு மனம் துவண்டு போகாது மீண்டும் எமது தமிழீழ மண் எழுச்சியுற, வளர்ச்சியுற எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாடுபடவேண்டும். எதிரியானவன் திகைக்கும் வகையில் அனைவரும் எமது நாட்டை பொருளாதாரரீதியில் கட்டிஎழுப்ப முன்வரவேண்டும்.


போர்க்கால வாழ்விற்குள் நாம் எமது மண்ணில் உள்ள வளங்களை மேம்படுத்திக் கொள்வதோடு எங்கள் காணிகளில் அனாவசியமாகச் செழித்து நிற்கும் செடிகொடி நச்சுப் பூண்டுகளை அழித்து நிலத்தை துப்பரவாக்கி என்றைக்கும் பயன்தரக்கூடிய பழப்பயிர்களான வாழை, பப்பாசி, கொடித்தோடை, எலுமிச்சை போன்றவற்றையும் மரவள்ளி, வற்றாளை, சட்டிக்கரணை, இராசவள்ளி, மோதக்வள்ளி போன்ற கிழங்குப் பயிர்களையும் மற்றும் உழுந்து, பயறு, சோயா, கௌபி, குரக்கன், சோளம், தினை, இறுங்கு, சாமை போன்ற பயிர்களையும் மரக்கறி, இலைக்கறி வகைகளையும் உற்பத்தி செய்து எமது உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முயல வேண்டும்

இது மாத்திரமின்றி எமது தேசத்திற்கு பொருத்தமான வளங்களைக் கண்டறிந்து அதற்கேற்ப பொருத்தப் பொறிமுறைகளைப் பயன்படுத்த ஏதுவாக புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் தமது ஆக்க அறிவியல்பூர்வமான பங்களிப்பை ஆற்றல் வேண்டும். இன்று சிறீலங்கா தேசத்தால் தமிழீழத்தின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டிருக்கும் உணவுத் தடைகளை முறியடிப்பதற்கு பணப்பயிர்களை விடுத்து அனைவரும் அத்தியாவசிய உணவுப்பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழீழ தேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளை சிறீலங்கா ஆக்கிரமித்துக் கொண்டாலும் எதிரியின் கட்டுப்பாடற்ற எமது தமிழ்ப்பிரதேசங்களில் காலூன்றி நிற்கும் எம் உறவுகளுக்கு ஏதுவான பொருண்மிய வலுவை ஏற்படுத்த புலம்பெயர் தமிழீழச் சமூகம் ஒருங்கிணைத்து பாடுபடவேண்டியது அவசியமாகின்றது.

ஒன்றுபட்ட உடல் உள உழைப்போடு தமிழீழ இறைமை மீட்டெடுக்கப்படுகின்ற வேளையில் பொருண்மிய வலுவுள்ள நாடாகப் பரிணமிக்க அனைவரும் பாடுபடவேண்டியது அத்தியாவசியமானதாகும். ■

**அலெக்ஸ் பரந்தாமன்**



உதிரக் காத்திருக்கும் சருகும் - வாழ்வின்
உயிர்ப்பிற்காய் காத்திருக்கும் மலரும்- வாழ்வை
புதிரோடு பாத்திருக்கும் தளிரும்...
வேரின்றி விதியிலே...

சந்ததியாய் வாழ்ந்தினித்த மண்ணிழந்து
அகதி என்ற பெயரோடு... எம்மக்கள்
விதியிலே...

வயிறு பற்றிஎரிந்தால் போதாது..
அவர்கள் வாழ்வினிக்க.. உங்கள் மனது
சுரக்கட்டும்.

# வாசலில் கோலமிட்டோம் வருக நூற்றாண்டே

எங்கனும் சீதளம் ஏறிய
காலம்
எழுந்து நின்றே கரம் கூப்புது
ஞாலம்
செங்கதிர் எழுந்தது சிரித்தன
மலர்கள்
தேவியர் எழுதினர் வாசலிற்
கோலம்
பொங்கிடும் பூம்புனல்
சலசலத்தோடிப்
பெருகிடச் செவியினில் மங்கல
நாதம்
கங்குலின் திரையது விலகுது
முகத்தைக்
காட்டுக ஒளிதரப் போகும்
நூற்றாண்டே.

வாசலிலே விளக்கேற்றினோம்
அரசே
வருகவே வரம்தரப் போகுமெம்
குருவே
வீசுது ஊரெல்லாம் மெல்லிய
காற்று
விண்ணிறம் செந்நிறம் ஆனது
பாராய்
தேசமெலாம் எதிர்பார்ப்புடன்
உந்தன்
திருமுகம் பார்த்துளதாம் என
அறிந்தோம்
பேசுக நாம்படும் பேரிடர்
தொலையப்
புன்னகை காட்டுக புதிய
நூற்றரண்டே.

தாமரைப் பூவெடுத்தே ஒரு
மாலை
சமைத்தனம் உன்திரு மேனியிற்
பூசக்
காமனைக்கொண்டுமே சந்தனம்
அரைத்தோம்
கால்படும் திசையெலாம் கம்பளம்
விரித்தோம்
பாமழையால் உனைப்பாடியே
நனைத்தோம்
பாலமுதை உனக்காகவே
படைத்தோம்
நாமெலாம் வெந்துளோம்
வெந்தது போதும்
நல்லன தந்திட வருக
நூற்றாண்டே.

போன நூற்றாண்டிலே
புதுமைகள் கண்டார்
போய் நிலவேறியே
காலினைப் பதித்தார்
வானமே வசமென வந்தது
கையில்
வல்லமை கண்டது பூமியின்
மேனி
கூனர் என்றிருந்தவர்
கூடத்தம் உரிமைக்
குரலினால் விடுதலைத்
தீயிடை குதித்தார்
மானமே பெரிதென
நாமுமெம் வாசல்
மலர்ந்தனம் ஆயினும்
வரவிலை வசந்தம்.

இந்த நூற்றாண்டிலெம்
இன்னல்கள் யாவும்
எரிந்திட அருள்தர
வேண்டுமெம் திருவே
சொந்தமென்றே தமிழீழம்
எம்கையில்
சேர்ந்திட வரம்தர
வேண்டுமெம் அரசே
விந்தைகள் காணிட
வேண்டுமெம் தேசம்
வீரியம் ஊறிட வேண்டுமெம்
பூமி
சொந்தமாய் தமிழரும்
ஊர்தியொன்றாக்கித்
திங்களில் இறங்கிட அருள்க
நூற்றாண்டே.

போரிலா உலகினைப்
போடுவாய் மடியில்
புன்னகை மட்டுமே தந்தருள்
புவியில்
காரிருள் கலைந்திடக்
காற்றென வருக
கண்களிலே ஒளி
வீச்சினைத்தருக
பேரிடி போதுமே போதுமே
தேவே
பூங்குயிலே இனிப்பாடிட
அருள்க
தேரினை இறக்குக
எங்களின் தெருவில்
சீக்கிரம் யாவையும் தருக
நூற்றாண்டே.

-புதுவை இரத்தினதுரை.

## வங்கக் கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீர மறவர்களின் எட்டாவது ஆண்டு நினைவெழுச்சி நிகழ்ச்சிகள்

ஜேர்மனியின் தென்மாநிலத் தலைநகரான சுட்காட் நகரில் 20.01.2001 அன்று வெகு எழுச்சிகரமாக நடந்தேறியது. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.






பிரித்தானிய வெம்பிளியில் உள்ள கோப்பாண்ட் பாடசாலை மண்டபத்தில் 20.01.2001 அன்று எழுச்சி நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மண்டபம் நிறைந்த பிரித்தானியா வாழ் தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர்.

சுவிற்சர்லாந்து பாசல் மாநகரில் நினைவெழுச்சி நிகழ்வு எழுச்சியோடு நடந்தது. இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்



| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |